Registered as a NewsPaper

விலை ரூபா: 10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-24

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-11 | 26-12-2005 | திங்கட்கிழமை | ஓசை-311

உங்கள் நிறுவனங்களின்
உள்ளக தொலைபேசி
இணைப்புக்களுக்கு...

கிளிநொச்சியில்
அதிக நிறுவனங்களுக்கு
உள்ளகத் தொலைபேசி
இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள்.

நொதேன் ரெக்னோலஜி
பிறைவேட் லிமிட்டட்
இல:52, 2ஆம்குறுக்குத்தெரு, வவுனியா.
தொலைபேசி : 024-2221649.
இல 20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 021-2225653 (சி-13518)

# அமரர் ஜோசப் பரராசசிங்கத்திற்கு 'மாமனிதர்' விருது வழங்கி கௌரவம்



## இலட்சியத்திற்காக உழைத்த உத்தமர் என்றும் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் புகழாரம்

*இலட்சியத்திற்காக உறுதியோடு உழைத்த உத்தமர் என அமரர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களுக்கு புகழாரம் சூட்டியுள்ள தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் அமரரின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது விடுதலைப் பணியைக் கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" எனும் அதியுயர் தேசிய விருதை வழங்கிக் கௌரவித்துள்ளார்.*

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு; சுயநலவாழ்வைத் துறந்து, பொதுநல சேவையை இலட்சியமாக வரித்து, அந்த உயர்ந்த இலட்சியத்திற்காக உறுதியோடு உழைத்த ஒரு உத்தம மனிதரை

(24 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்காட்டி இணைப்பு



ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தால் உயிர் நீத்தவர்களின் நினைவைத் தாங்கி இவ் அனர்த்தத்தில் உயிரிழந்த செந்தளிர் சிறுவர் இல்லச் சிறார்கள், பணியாளர்களின் உருவப்படம்தாங்கிய நாட்காட்டி இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## தமிழர் உரிமைக்காகக் குரல் எழுப்பியவரை சிறிலங்கா புலனாய்வுத்துறை மண்ணில் வீழ்த்தியது

### அரசியல்துறையின் அறிக்கை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழ்மக்களின் மனிதஉரிமைகளுக்காக சர்வதேச அரங்கிலும் இராஜதந்திர அரங்கிலும் குரல் எழுப்பிய மனித உரிமைச் செயற்பாட்டாளரை சிறிலங்கா படைப்புலனாய்வுத் துறையினர் மண்ணில் வீழ்த்தியுள்ளனர் என மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் மறைவு குறித்து அரசியல் துறை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ்த்தேசப்பற்றாளரும் மனித உரிமை விழுமியங்களை மதித்து மனித உரிமை மேம்பாட்டுக்காக உழைத்தவருமான தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் மட்டக்களப்பு நகரின் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள செண்மேரிஸ் தேவாலயத்தில் 24 டிசம்பர் 2005 நள்ளிரவு அன்று நத்தார்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் இராணுவம் படுகொலைசெய்த மூவர் அடையாளம் காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.விளையாட்டரங்கப்பகுதியில் நேற்று முன்தினம் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பலியான ஐந்துபேரில் மூவரது சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. யாழ்.கொட்டடிப்பகுதியில் இயந்திர திருத்தகம் ஒன்றில் பணிபுரியும் வேலணை மேற்கு வேலணையைச் சேர்ந்த பாலசிங்கம் சந்திரகுமார் (வயது-24), யாழ்.மத்திய கல்லூரி இரவு பாதுகாப்பு உத்தியோகத்தரான கொடிகாமம் தவசிகுளத்தைச்சேர்ந்த கிருஷ்ணர் நிமலேஸ்வரன் (வயது-31) ஆகியோரது சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டன.

மேலும் ஒருவரது சடலத்தின் சட்டைப்பையில் ஹற்றன் நசனல் வங்கிப் புத்தகம் இருந்தது. அதில் திருநாவுக்கரசு ஜெயகாந்தன், குரும்பசிட்டி தெல்லிப்பழை என்ற முகவரி காணப்பட்டது. இவர் 32 வயது மதிக்கத்தக்கவராவார். இருவரது சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. (27,37)

## ஜோசப்பரராசசிங்கத்தின் கொலைக்கு இராணுவமே பொறுப்பேற்க வேண்டும்

### வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் கண்டனம்

தமிழ்தேசப்பற்றாளரும் தமிழ்தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராசசிங்கத்தின் கொலைக்கு சிறிலங்கா இராணுவமே பொறுப்பேற்க வேண்டுமென்று வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நத்தார் நள்ளிரவு திருப்பலியில் கத்தோலிக்க பேராலயத்திலே ஒரு மனித உரிமை ஆர்வலர் அதாவது நீண்டகாலமாக மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்த ஒரு மாமனிதர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கமும் அதனுடன் சேர்ந்தியங்குகின்ற ஆயுதக்குழுக்களும் இதற்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்தப் படுகொலையை வடக்கு கிழக்கு மனிதஉரிமைச் செயலகம் கடுமையான வார்த்தைகளினால் கண்டிக்கின்றது. மனித உரிமை ஆர்வலர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கின்ற ஒரு பாரிய அழுத்தம் என்பதை சர்வதே சமூகத்திற்கு கூறி சர்வதேச சமூகம், இந்தக் கொலையைக் கண்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோமெனத் தெரிவித்தார்.

## மன்னார் சுற்றிவளைப்பில் காணாமல்போன– ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சடலமாக மீட்பு

(மன்னார்)

மன்னார் பேசாலையில் சிறிலங்காப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலையடுத்து படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது காணாமல்போன ஒரே குடும்பத் தைச் சேர்ந்த நால்வரும் நேற்று சடலங்களாகமீட்கப்பட்டுள்ளனர். சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் இம்மானுவேல், (வயது-38) அவரது மனைவி அந்தோனிக்கம், மற்றும் அவர்களின் பிள்ளைகளான சுகந்தி மற்றும் திலக்சன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களது சடலங்கள் பேசாலை நூறு வீட்டுத்திட்டத்திற்கு அருகிலுள்ள காட்டுப்பகுதியில் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. பேசாலையில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலையடுத்து வீடு வீடாகச் சென்று படையினர் தேடுதலை நடாத்தியதுடன் மக்களையும் கடுமையாகத் தாக்கியிருந

(24 ஆம் பக்கம் பார்க்த)

## குடாநாட்டில் படையினர் அராஜகம்; மூன்று பேர் துப்பாக்கிச் சூட்டில் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் படையினர் நடத்திய இருவேறு தாக்குதல்களில் மூன்று பேர் பலியாகியுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவனில்....

யாழ்பலாலி வீதியின் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் வைத்து பொதுமகன் ஒருவர் நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டுள் ளார். உயிரிழந்தவர் சித்தன்கேணிப்பகுதியினைச் சேர்ந்த கனகு என்றழைக்கப்படும் அரிய ரத்தினம் கனகராசா (வயது-65) என அடையாளங் காணப்பட்டுள்ளது. இவரது சடலம் புன்னாலைக் கட்டுவன்-நிலாவரை வீதிப்பகுதியில் காணப்பட்டது.

இப்பகுதியிலுள்ள வெதுப்பகம் ஒன்றில் கடமையாற்றி வந்தவரெனக் கூறப்படும் குறித்த நபர், வெதுப்பகத்திலிருந்து அதிகாலை 1.45

(24 ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புக்கொடிகட்டி சோககீதம் இசைத்து கிளியிலும், யாழிலும் மாமனிதருக்கு அஞ்சலி

(நமது நிருபர்)

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் கறுப்புக் கொடி கட்டி சோககீதம் இசைத்து துக்கதினம் கடைப்பிடிக்கப்படஉள்ளது.

நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் இழப்பிற்கு அஞ்சலி செலுத்துமுகமாக கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்து திணைக்களங்கள், நிறுவனங்கள் வர்த்தக நிலையங்களில் கறுப்புக்கொடிகளைக் கட்டி எமது உணர்வலைகளைப் பகிர்ந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

அவரது உடல் தாயகப் பகுதிகளில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதி வணக்க

(24 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 1938-05-04 — உதிர்வு 2005-12-24

## அமரர்
## பொன்னையா துரைராஜா ஜோசேப்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி அருளானந்தி மரியநாயகம் அவர்களின் தந்தையார் அமரர் பொன்னையா துரைராஜா ஜோசேப் அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவுக்கழகம்,
மு.மல்லாவி மத்திய கல்லூரி,

7186

# சுனாமியின் ஓராண்டை நினைவு கூறுகின்றோம்


கடந்த 26.12.2004 அன்று முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்த பேரலையின்போது சாவடைந்த செம்மலை கிழக்கு (நாயாறு) மக்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் 26.12.2005 காலை 8.30 மணிக்கு நாயாற்றுப்பகுதியில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் இதில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளு மாறு கேட்டுக்கொள் கின்றோம

ஊரக மேம்பாட்டுப் பேரவை
செம்மலை கிழக்கு,
(நாயாறு)

(சி.13628)

# ஓராண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு 1983 - 09 - 27 — வீரச்சாவு 2004 - 12 - 26



மருத்துவப் பிரிவு
**லெப். அமுதருவி**
[தவராசதுரை-வாகினி [ரேணு]
உடுத்துறை

சுனாமிப் பேரலையின் போது வீரகாவியமான எமது மருத்துவப் போராளியின் நினைவில்

தகவல்:-
மருத்துவப்பிரிவு
(மகளிர்)

(7157)

# ஓராண்டு நீங்காத நினைவில்



அன்னை மடியில் 11 - 05 - 2001 — அலையின் பிடியில் 26 - 12 - 2004

*செல்வன் சிவகுமார்- பிரியதர்ஷன் (தர்ஷன்)*
*மருதங்கேணி*

ஈண்டு நான்காண்டு ஆகுமுன்பே-
மாண்டு போனாயோ!
மீண்டும் ஓர் பிறப்பு-உன்
தாய் வயிற்றில்-நீ எடுத்து
மீட்டிடுவாய் துயரிலிருள்
ஆண்டு பல ஓடினாலும் ஆறாது
உன் நினைவ

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா
உறவினர்கள்.

(7184)

# 1ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு 1978 - 11 - 9 — இறப்பு 2004 - 12 - 26

**தவராசா—சரோஜாதேவி**



பிறப்பு 2003 - 10 - 13

**தவராசா—அஜோகன்**

*அன்பான எம் முத்துக்களே*
*ஆழிப் பேரலையில் அள்ளுண்டு*
*போனீர்களோ*
*ஆண்டுகள் பல ஆனாலும்*
*அழியாது உம் நினைவு*

முகவரி
155 ஆம் கட்டை,
மலையாளபுரம்,
கிளிநொச்சி. (7164)

உங்கள் நினைவில்
கோபாலு. பூபதி
குடும்பத்தினர்


# ஆழிப்பேரலையின் அவலம் சுமந்த தேச உறவுகளின் நினைவு சுமந்து வருகிறது

# பாடல் இசைத்தட்டு வெளியீட்டு

இடம்: முல்லைத்தீவு
பிரதான நிகழ்விடம்.

காலம்: 26-12-2005

நிதர்சன நிறுவனத்தின் தாய்க் கலையகமாகிய தர்மேந்திரா கலையகத்தினரின் உருவாக்கத்தில் வெளிவருகின்றன.

*இசைப்பேழையை மீண்டும் மீண்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் த.தே.தொலைக்காட்சி தொடர்பகம்: பிரதான வீதி, முல்லைத்தீவு- முதன்மைச்சாலை, கிளிநொச்சி.*



## மானைப்பிடிக்க தனி பொலீஸ் படை

ஜேர்மனியின் பதன்- பதன் நகரில் பிரசித்தி பெற்ற குழந்தைகள் பொழுதுபோக்கு பூங்கா உள்ளது. நத்தார் பண்டிகையையொட்டி பூங்காவில் நடைபெற்ற விசேட நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக அபூர்வ வகை கலைமான் ஒன்று வரவழைக்கப்பட்டிருந்தது. அந்த மான், பூங்காவில் இருந்து தப்பி ஓடி அருகிலுள்ள கோல்ப் மைதானத்தில் பதுங்கிக் கொண்டது.

உடனடியாக அந்தக் கலைமானைப் பிடிக்க தனி பொலிஸ் படை அமைக்கப்பட்டது. பொலிசாரின் பல மணிநேர தேடுதல் வேட்டைக்குப்பிறகு, அந்த மான் பிடிபட்டது. என்றாலும் மைதானத்தை மான் சேதப்படுத்தியதற்காக, பூங்கா நிர்வாகம் நஷ்டஈடு வழங்க வேண்டிய நிலையிலுள்ளது.

# இந்தோனேஷியாவில் சுனாமி 1ஆம் ஆண்டு நினைவு

# இருபத்தெட்டு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பு

[ஜகார்த்தா]

**சுனாமி பேரலைகள் ஏற்படுத்திய கோரத்தின் முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இந்தோனேஷியாவில் இன்று நடைபெறுகிறது. இதில் 28 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.**

ஆசிய நாடுகளைப் புரட்டிப் போட்ட சுனாமிப் பேரலைகள் இந்தோனேஷியாவிலுள்ள அழகிய தீவான பண்டா அசேயையும் ஒருகை பார்த்தன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகள் தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றன. இந்நிலையில் சுனாமிப் பேரலைகள் ஏற்படுத்திய சோகத்தின் முதலாம் ஆண்டு தினம் இந்தோனேஷியாவிலுள்ள பண்டா அசேயில் திங்கட்கிழமை நடைபெறுகிறது. அந்நாட்டு அதிபர் சுசிலோ பம்பாங் கலந்து கொள்கிறார். 87 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் 28 நாடுகள் கலந்து கொள்கின்றன.

மலேசியா, சிங்கப்பூர், பாகிஸ்தான் தென்கொரியா நாடுகளின் சார்பில் அந்நாட்டு அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இந்தியா, சீனா, பிரிட்டன், ஜோர்டான், குவைத், பிரான்ஸ், ஆஸ்திரியா, போர்த்துக்கல் நாடுகள் சார்பில் அந்நாடுகளுக்கான இந்தோனேஷியா தூதரக அதிகாரிகள் நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்கள்.

தாய்லாந்து, வியட்நாம் மற்றும் புருனை நாடுகள் சார்பில் அமைச்சர் நிலையிலான பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.

## அவுஸ். பணயக் கைதிகள் விடுதலை

(சாணா)

ஏமன் நாட்டிற்கு சுற்றுலா சென்ற அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் அங்குள்ள மலைவாசியினரால் கடந்த புதன் கிழமை கடத்திச் செல்லப்பட்டு பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். சிறையில் அடைக்கப்பட்டுள்ள மலைவாசித் தலைவரை விடுதலை செய்யவேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இதுதொடர்பாக மலைவாசி தலைவர் மூலம் அதிகாரிகள் சமரசப் பேச்சு நடத்தினார்கள். இதனை அடுத்து அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இரண்டு பேரும் விடுதலை செய்யப்பட்டனர். கடத்தல்காரர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டதா? என்பதை அதிகாரிகள் உறுதி செய்யவில்லை.



ரஷ்யா தலைநகர் மொஸ்கோவில் புத்தாண்டு தொடங்குவதை ஒட்டி கிரம்லின் கதீட்ரல் சதுக்கம் முன்பு 30 மீற்றர் உயரப் புத்தாண்டு மரம் வைக்கப்பட்டுள்ளது.

# இரண்டு ஆண்டுகளுக்கான வரவு-செலவுத்திட்டம்

# ஐ.நா.பொ சபை ஒப்புதல்

பல மாதங்கள் நடந்த விவாதத்துக்குப் பிறகு பணக்கார நாடுகளின் நிர்ப்பந்தத்துக்கு ஏழை நாடுகள் பணிந்து விட்டன. இரண்டு ஆண்டுகளுக்கான வரவு- செலவுத்திட்டத் தொகை ரூபா 17ஆயிரத்து 100 கோடிக்கு ஐ.நா பொதுச்சபை ஒப்புதல் அளித்துள்ளது.

ஐ.நா பொதுச்சபையில் 191 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இதில் ஏழை மற்றும் வளரும் நாடுகளின் எண்ணிக்கை 133 ஆக உள்ளது.

ஐ.நாவுக்கு வழங்கப்படும் நிதியில் 80 சதவீதத்தை பணக்கார நாடுகளே வழங்கி வருகின்றன. அமெரிக்கா யப்பான் 40 சதவீதமும், ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள 25 நாடுகள் 40 சதவீதமும் அளித்து வருகின்றன. ஐ.நாவின் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் செலவீனங்களை ஒன்றாக இணைக்க வேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட பணக்கார நாடுகள் வற்புறுத்தி வருகின்றன. இதை 77 ஏழை நாடுகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. கூடுதல் நிதி தரும் பணக்கார நாடுகளே ஐ.நா நிதி விவகாரத்தின் மீது கட்டுப்பாடு ஏற்படுத்தும் முயற்சி இது எனக் கூறப்பட்டது.

இந்தப் பிரச்சினை பற்றி பல மாதங்களாக விவாதம் [illegible] வரும் 31ஆம் திகதிக்குள் [illegible] முடிவு எடுக்க வேண்டுமென்[illegible] இருந்தது. நேற்று முன்தினம் இது பற்றி உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் ஆலோசனைகளை நடத்தினர். இறுதியாக பணக்கார நாடுகளின் நிர்ப்பந்தத்துக்கு ஏழை நாடுகள் பணிந்ததாயினும் இந்நடவடிக்கை தற்காலிகமானதே எனக் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து பொதுச்சபையில் இரண்டு ஆண்டுகால வரவு செலவுத்திட்டத் தொகையான ரூபா.17 ஆயிரத்து 100கோடிக்கு ஒப்புதல் அறிவிக்கப்பட்டது. இதில் 2006ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூபா.4 ஆயிரத்து 275 கோடி ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. முதல் ஆறு [illegible]ங்களிலேயே இந்தத் தொகை [illegible]விடப்பட்டுவிடும். இதனால் ஐ.நா [illegible] நெருக்கடியில் சிக்கித்தவிக்கப் [illegible]கிறது.

# பிரதமர் ரொனி பிளேயர் பதவி விலகுகிறார்

இங்கிலாந்தில் இப்போது பிரதமராக இருப்பவர் ரொனி பிளேயர். தொழிலாளர் கட்சியை சேர்ந்த இவர் மூன்று முறை தொடர்ந்து பிரதமர் பதவிவகித்து வருகிறார்.

சமீப காலமாக அவருக்கு கட்சியில் எதிர்ப்புக் கிளம்பி வருகிறது. தீவிரவாதிகளை ஒடுக்க இவர் கொண்டு வந்த புதிய திட்டங்களை அனைத்து தரப்பினரும் எதிர்த்து வருகிறார்கள். பொதுத்துறை நிறுவனங்களில் சீரமைப்பு சட்ட திருத்த மசோதா ஏற்கனவே பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு மீண்டும் இந்த சட்டத்தை அவர் தாக்கல் செய்யப் போகிறார். அது தோல்வியடைந்து விட்டால் அடுத்த ஆண்டே பிரதமர் பதவியை ராஜினாமா செய்வேன் என்று ரொனி பிளேயர் அறிவித்திருக்கிறார்.

இது பற்றிஅவரது உதவியாளர் கூறும் போது "இதுவெறும் மிரட்டல் அல்ல. எந்தப் பிரச்சினையுமின்றி கட்சியின் நலன்கருதி அவர் பதவி விலக முடிவு செய்திருக்கிறார்" என்று தெரிவித்துள்ளார்.

ரொனி பிளேயர் ராஜினாமா செய்தால் அவருக்குப் பதிலாக புதிய பிரதமராக, இப்போது நிதிமந்திரியாக இருக்கும் கோர்டன் பிரவுன் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


# இஸ்லாமிய குடும்ப சட்டத்திருத்தம் மலேசிய பாராளுமன்றம் ஒப்புதல்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் சர்ச்சைக்குரிய இஸ்லாமிய குடும்ப சட்ட திருத்தத்துக்கு அந்நாட்டு பாராளுமன்றம் கடந்த வியாழக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

இச்சட்டதிருத்திற்குப் பெண் பா.உக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இச்சட்ட திருத்தத்தின்படி மலேசிய முஸ்லிம்கள் பலதாரமணம் செய்து கொள்ளவும் அவசியம் ஏற்பட்டால் மனைவியை விவாகரத்து செய்து கொள்ளவும் முடியும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நாடு மலேசியா. இங்குள்ள முஸ்லிம்களுக்கு திருமண விடயத்தில் அதிக உரிமைகளை இந்தச் சட்ட திருத்தம் அளித்துள்ளது. எக்காரணத்தைக் கொண்டும் மனைவியை விவாகரத்து செய்யவும் அவர்களது சொத்தில் உரிமைகோரவும் இந்தச் சட்டதிருத்தம் வகை செய்துள்ளது.



**ஆமைக்கு நத்தார் கேக்.**

*நத்தார் பண்டிகையையொட்டி டோக்கியோ நகரிலுள்ள மிருகக்காட்சி சாலையில் உள்ள மிருகங்களுக்கும் கேக் வழங்கப்பட்டுள்ளது. நத்தார் தாத்தா வேடம் அணிந்த ஊழியர் ஒருவர் அங்குள்ள ஒரு ஆமைக்கு கேக் ஊட்டிய காட்சி.*

# சீனாவில் வெடிவிபத்தில் சிக்கி நாற்பத்திரண்டு பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் சிசுவான் மாகாணத்தில் இரண்டு நகரங்களுக்கு இடையே சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 42 பேர் பலியானார்கள் என சீனாவின் உத்தியோக பூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன.

மீட்பு நடவடிக்கை நடந்து வருகிறது. சாவு எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று கூறப்படுகின்றது.

சீனாவில் அடிக்கடி நிலக்கரிச் சுரங்கங்களில் விபத்து ஏற்பட்டு ஆண்டு தோறும் பல ஆயிரக்கணக்கானவர்கள் பலியாகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



*ஆஜர்பைஜான் பயணிகள் விமானம் தலைநகர் பாகுவின் வடக்குகடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானது. இதில் பயணம் செய்த 23 பேர் பலியாயினர். நொருங்கிய விமானத்தின் பாகங்கள் சிதறிக்கிடக்கின்றன.*

# ஈராக்கிலிருந்து இரு படைப்பிரிவுகளை திரும்பப்பெற அமெரிக்கா முடிவு

(பலூஜா)

ஈராக்கிலிருந்து இரு படைப் பிரிவுகளை விலக்கிக்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இத்தகவலை அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் தெரிவித்தார். ஆப்கானிஸ்தான் சென்றிருந்த அவர் அங்கிருந்து ஈராக் நாட்டுக்கு திடீரென பயணம் மேற்கொண்டார்.

ஈராக்கில் பலூஜா நகருக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்ற அவர், அங்கு முகாமிட்டுள்ள அமெரிக்கப் படையினர் இடையே உரையாற்றினார். ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைப்பிரிவுகள் இரண்டை விலக்கிக் கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றார்அவர்.

ஈராக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசு அடுத்த ஆண்டு பதவியேற்கும். ஈராக்கின் எதிர்கால திட்டங்கள் குறித்து புதிய அரசுடன் அமெரிக்க அரசு விவாதிக்கும் என்றார் அவர்.

# யப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

யப்பானில் நேற்று முன்தினம் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுமானியில் அது 4.8 அலகாகப் பதிவானது. ஒருவர் லேசான காயமடைந்தார்.

இந்த நிலநடுக்கத்தால் சுனாமி பேரலைகள் உருவாக வாய்ப்பில்லை என வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சுனாமியால் சாவடைந்தவர்களின் நினைவாலயம் முல்லைத்தீவு இராயப்பர் ஆலயத்தில் இன்று திறப்பு

(முல்லைத்தீவு)

**சுனாமியினால் சாவடைந்த மக்களுக்கான ஓராண்டு நினைவுநாள் இன்று முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது. கடற்கரையில் அமைந்திருந்த புனித இராயப்பர் ஆலயத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி திறப்புவிழாவும், சுனாமியினால் சாவடைந்த மக்கள் நினைவாக முல்லை. பங்குத்தந்தையால் அச்சிடப்பட்ட நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளது.**

இராயப்பர் ஆலயத்தில் சுனாமியால் இறந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு அது நினைவாலயமாக திறக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து சுனாமியால் இறந்தவர்கள் புதைக் கப்பட்ட இடமான தண்ணீரூற்றிற்கும், புதுக்குடியிருப்புக்கும் ஒழுங்குகள், செய்யப்பட்டுள்ள பேருந்தில் மக்கள் அழைத்துச் செல்லப்படுவர் அங்கு நினைவு நிகழ்வுகள் இடம்பெறும்.

வண்ணாங்குள மக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட நினைவுப் பந்தலில் சுனாமியால் இறந்தவர்களின் உருவப்படங்கள் வைக்கப்படவுள்ளன.

இதே வேளை ஆழிப்பேரலையினால் அகால மரணமடைந்தோரின் ஓராம் ஆண்டு நினைவாக ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள் இன்று விநாயகபுரம் சித்தி விநாயகர் ஆலயத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ் ஆராதனையில் சகலரையும், கலந்து கொள்ளுமாறு பூவரசங் குளம் பொன்நகர் விநாயகபுரம் மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

(24,20)



முல்லைத்தீவு மணல் குடியிருப்புப்பகுதியில் வசித்து வந்த எழுபது வயது நிரம்பிய மூதாட்டி சுனாமி அனர்த்தத்தில் அகப்பட்டு காயமடைந்த நிலையில் விடுதலைப்புலிப்போராளிகளால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போதும் மாவட்ட வைத்திய சாலையினின் பராமரிப்பிலிருந்து கிசிச்சை பெற்று வருகிறார். (படம்.சோதி)

# அவுஸ்திரேலிய மருத்துவ நிதிய அனுசரணையில் பல் மருத்துவத்தை மேம்படுத்த நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

அவுஸ்திரேலிய மருத்துவ நிதியத்தின் அனுசரணையுடன் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் இணைந்து பல் மருத்துவ சேவையை மேம்படுத்தும் வகையிலான நிகழ்வும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் கடந்த புதன் பிற்பகல் மூன்று மணியளவில் 1-9 தங்கக மண்டபத்தில் மருத்துவத் துறை மாணவன் தீபன் தலைமையில் இடம்பெற்றது.



தொடர்ந்து வரவேற்புரையினை மருத்துவ மாணவன் இசையமுதன் நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் இரட்ணம், புலிகளின் குரல் பணிப்பாளர் ந.தமிழன்பன் மருத்துவப்பிரிவு வைத்தியர் வாமன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து வைத்தியர் வாசுகி அவர்களினால் பயிற்றுவிக்கப்பட்ட சுகாதார தொண்டர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். சான்றிதழ்களை தமிழீழ மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா, இரட்ணம், வாசுகி, அவுஸ்திரேலிய பற்சுகாதார மருத்துவர் அபிராமி ஆகியோர் வழங்கிக் கௌரவித்தார்கள். இதன்போது பூநகரி, ஆழியவளை மாங்குளம் கற்சிலைமடு அளம்பில் திலீபன் மருத்துவமனைகளுக்கும பல் மருத்துவத்திற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து பற்சிகிச்சையின் போது எவ்வாறு சிகிச்சையினை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இது போன்ற மருத்துவ சேவையினை எப்படி செய்ய வேண்டும் என்று மாணவர்களினாலும், மருத்துவர் வாசுகி அவர்களினாலும் விளக்க உரைகள் வழங்கப்பட்டது. (தீ.கு)

# பொதுசன மாதாந்த உதவிப்பண மீளாய்வுக்கு வருகை தருக

## கண்டாவளை பி.செயலர் கோரிக்கை

(விசுமடு)

பொதுசன மாதாந்த உதவிப்பண மீளாய்வு வேலைகள் கிராம ரீதியாக இடம்பெற இருப்பதாக கண்டாவளைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 161 கிராமங்களில் 2006 ஆம் ஆண்டிற்கான பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவிற்கான மீளாய்வு வேலைகள் இடம்பெற இருப்பதாகவும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்றுக் கொள்பவர்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர் அலுவலகத்தில் குறிப்பிட்ட நாளில் சமுகம் தந்து தமது கொடுப்பனவுக்கான மீளாய்வை மேற்கொள்ளுமாறும் கண்டாவளைப் பிரதேச செயலர் சி. சத்தியசீலன் கேட்டுள்ளார். கிராமங்களின் விபரம், கிராம அலுவலர் பிரிவுகள், காலம் வருமாறு

* குமரபுரம் கிராமத்தில் 29.12.2005ஆம் திகதி காலை 9.00 மணிதொடக்கம் பகல் 12.00 மணி வரை குமரபுரம் கிராம அலுவலர் அலுவலகத்திலும்,* உமையாள்புரம்-பரந்தன் இரண்டு கிராமங்கள் 29.12.2005ஆம் திகதி பி.ப 2.00மணி தொடக்கம் மாலை 5.00மணி வரை பரந்தன் கிராம அலுவலர் அலுவலகத்திலும்,* கோரக்கன்கட்டு-ஊரியான்-முரசு மோட்டை ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு 29.12.2005ஆம் திகதி ஊரியான் பொதுநோக்கு மண்டபம் ஊரியான் கிராம அலுவலர் அலுவலகத்திலும்,. * கண்டாவளை கிராமங்களுக்கு 29.12.2005ஆம் திகதி காலை 9.00மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை கண்டாவளை பிரதேச செயலகத்திலும் நடைபெறும்.

* பெரியகுளம் கிராமத்தில் 30.12.2005ஆம் திகதி காலை 9.00 மணி முதல் பகல் 12.00மணி வரை, பெரியகுளம் கிராம அலுவலர் அலுவலகத்திலும் புளியம் பொக்கணை கிராமத்தில் 30.12.2005ஆம் திகதி பகல் 1.00 மணிமுதல் மாலை 4.00மணி வரை புளியம் பொக்கணை கிராம அலுவலர் அலுவலகத்திலும், * கல்மடு நகர் கிராமத்தில் 30.12.2005ஆம் திகதிகாலை 9.00 மணி தொடக்கம் பகல் 12.00மணி வரை கல்மடு நகர் கிராம அலுவலர் அலுவலகத்திலும், * தருமபுரம் மேற்கு- தருமபுரம்- கிழக்கு ஆகிய இரண்டு கிராமங் களின் மக்களுக்கு 29.12.2005ஆம் திகதி காலை 9.00மணி முதல் மாலை 4.00மணிவரையும் தருமபுரம் கிராம அலுவலர் அலுவலகத்திலும், * புன்னை நீராவிக் கிராமத்தில் 30.12.2005ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை புன்னை நீராவி கிராம அலுவலர் அலுவலகத்திலும் நடைபெறும்.

* பிரமந்தனாறு- கிராமத்தில் 29.12.2005ஆம் திகதி காலை 9.00மணி முதல் மாலை 4.00மணி வரை பிரமந்தனாறு கிராம அலுவலர் அலுவலகத்திலும்,

* கண்ணகி நகர் கிராமத்தில் 27.12.2005ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் பகல் 12.00மணிவரை கண்ணகிநகர் கிராம அலுவலர் அலுவலகத்திலும்,

* தட்டுவன் கொட்டி கிராமத்தில் 27.12.2005ஆம் திகதிகாலை 9.00 மணிமுதல் பகல் 12.00மணிவரையும் தட்டுவன்கொட்டி அ.த.க பாடசாலையிலும் பொதுசன மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவு 2006ஆம் ஆண்டிற்கான மீளாய்வு வேலைகள் நடைபெற இருப்பதாக கண்டாவளைப்பிரதேச செயலர் சி.சத்திய சீலன் தெரிவித்துள்ளார். (46),

# விளக்கில் விழும் விட்டில் பூச்சிகள் போல் சிங்களப் படை பொசுங்கப் போகின்றது

## முல்லை. மாவட்ட கல்விச் சமூகம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூகம் மீது சிங்கள அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளை முல்லை. மாவட்ட கல்விச் சமூகம் கண்டித்துள்ளது. இது தொடர்பாக முல்லை. மாவட்ட தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, முல்லை. மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

அமைதிப்போர்வையில் இனவாத அராஜகம் யாழ்ப்பாணத்தில் மீண்டும் தலை விரித்தாடுகின்றது. பீடாதிபதி துணை வேந்தர், விரிவுரையாளர், பாராளுமன்ற உறுப்பினர் மாணவர் என்று பாராது தன்னுடைய கோரக் குணத்தை அரச படைகள் சென்ற 19.12.2005ஆம்திகதி கட்டவிழ்த்து விட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். கண்டனம் மட்டுமல்ல கல்வி மான்களை மதிக்கத் தெரியாத காடையர் கூட்டத்தை எங்கள் தேசங்களில் இருந்து வெளியேறுமாறு எச்சரிக்கின்றோம் என முல்லை. மாவட்ட தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது.

அடம்பன் திரண்டு விட்டது. ஆனந்த திரளவைத்த பெருமை சிங்கள இனவாதிகளுக்கே உண்டு. அண்மையில் யாழ். பல்கலைச் சமூகத்தில் படையினரின் பிரவேசம் எங்கள் அனைத்து சமூகத்தையும் ஆயுத மேந்த அழைப்பு விட்டிருக்கின்றது. இதற்குப் பின்பும், எம் மண்ணில் நின்று அச்சுறுத்த முடியாது. விளக்கில் விழும் விட்டில் பூச்சிகள் போல் சிங்களப் படைகள், பொசுங்கப் போகின்றார்கள். உயிர் வேண்டுமானால் அவர்கள் எங்கள் தேசத்தை விட்டு ஓட வேண்டும். அன்றேல் சரணாகதி அடைய வேண்டும். தவறினால் அவர்களுக்கு தமிழீழ மண் புதைகுழியாக அமையுமென்பதை இந் நாளில் இடித்துரைக்கின்றோம் என மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து முல்லை மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வெள்ளையில் செங்குருதி பாய பதுங்கு குழிகளில் கல்வி கற்ற வர்கள் நாங்கள். உயிர் குடித்து இரத்தம் குடித்து வாழ்ந்த அரக்கர் குலத்தை அடியோடு அறிந்தவர் நாம். குண்டுகள் போட்ட சுவரை இழந்த பள்ளிகளில் கல்வி கற்றவர்கள் நாம். இவ் அழிவுகளைச் செய்தும் எம் மாணவர் சமூகம் விடுதலை உணர்வை வீசி விடவுமில்லை. பேரினவாதத்திற்குப் பணிந்து விடவும் இல்லை இன்று மீண்டும் பேரினவாதம் எங்கள் அறிவு எலும்பை உடைத்து போராட்டத்தில் மாணவர்களை கல்வி மான்களை அந்நியப்படுத்த எண்ணினால் அது பகல் கனவாகத்தான் முடியும்.

பேனாமுனை எதிரிக்கு புத்தி புகட்டும் என்ற காலங்கள் மறைந்து விட்டன.இன்று பேனா பிடித்த கரங்கள் யாவும் துப்பாக்கி தூக்க துணிந்து விட்ட செய்தியை இந்த நேரத்தில் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

சிங்களப்படைகளே நிறுத்துங்கள் அத்துமீறல்களை நிறுத்தாவிட்டால் பொங்கி எழுவோம். பொங்கி எழும் படையணியில் மட்டுமல்ல புலிவீரனாய் மாறி செங்களம் ஆடுவோம் என்ற செய்தியை இடித்துரைக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்பிற்கு பதிவு

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்ட தமிழ்ச்சங்கம், வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு (பேராதனைப் பல்கலைக்கழகம்) மாணவர்களைப் பதிவு செய்து 2006 சனவரி முதல் புதுக்குடியிருப்பு, முள்ளியவளை மல்லாவி ஆகிய இடங்களில் வகுப்புக்களை நடத்தவுள்ளது.

விரைவில் பதிவு செய்வதற்கான படிவங்கள் வரவுள்ளதாகவும், பதிவு செய்யவுள்ளவர்கள் புதுக்குடியிருப்பில் சங்கத்தலைவர் க.சரவணபவன், முள்ளிவளையில் செயலாளர் க.ஜெயவீரசிங்கம், மல்லாவியில் ஆசிரிய ஆலோசகர் திருமதி கௌரி புத்திரி ஆகியோருடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களைப் பதிந்து கொள்ளுமாறும் தலைவர் க.சரவணபவன் கேட்டுக் கொள்கின்றார்.

படிவம் கிடைத்தவுடன் அறிவிக்கப்பட்டதும் குறிப்பிட்ட இடங்களில் க.பொ.த உயர்தர சாதாரணதரச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றை நிழல்பிரதியுடன் கொண்டு வருவதுடன், பாஸ்போட் அளவிலான புகைப்படம் மூன்றும் கொண்டு வரவேண்டுமென்றும் கேட்கப்படுகின்றனர்.

(08)

# ஆதாரங் காட்டிப் பெற்றுக்கொள்க

(அலுவலசெய்தியாளர்)

நாச்சிக்குடா காவல் பணி மனையினரால் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் சில ஜெயபுரம் மாவட்ட நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

கண்டெடுக்கப்பட்ட பொருட்களான தொலைக் காட்சிப்பெட்டி, பொக்ஸ்டெக், அம்புசெற், பிளேன் பிறப்பாக்கி, றோல்பிளக், துவிச்சக்கரவண்டிபார் மற்றும் சில உதிரிப் பாகங்கள் கைக்கடிகாரங்கள் என்பனவே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனவே உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக்காட்டி எதிர்வரும் சனவரி முதலாம் திகதிக்கு முன்பு பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் வேண்டிக் கொள்கின்றனர். (கு.தீ)

# சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தின் ஓராண்டு; அனுஷ்டிக்க வடமராட்சியில் சிறப்பு ஏற்பாடு

(வடமராட்சி)

***சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஓராண்டு நினைவு நாளை அனுஷ்டிப்பதற்கு வடமராட்சியில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.***

அந்த வகையில் இன்று சுனாமி ஆழிப் பேரனர்த்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து அவர்களது ஆத்ம சாந்தியை வேண்டி ஆலயங்களில் விசேட வழிபாடுகளும், நினைவுப் பொதுக்கூட்டங்களும் இடம் பெறவுள்ளன.

குறிப்பாக வடமராட்சி வடக்கும் மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் உயிரிழந்தவர்களின் நினைவாக சுடர் ஏற்றி வழிபாடுகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் இறந்தவர்களது நினைவாக நினைவுத் தூபியொன்று அன்றையதினத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தினால் யாழ். குடாநாட்டு கடற்கரையோரப் பிரதேசங்கள் பேரழிவுகளைச் சந்தித்துள்ளமை தெரிந்ததே (33)

## ஐஸ்கிறீம் வாகனம் மோதி பாடசாலை மாணவன் பலி

(யாழ்ப்பாணம்)

ஐஸ்கிறீம் வாகனம் மோதியதில் பாடசாலை மாணவன் ஒருவர் பலியாகியுள்ளார்.

பண்டத்தரிப்பு சில்லாலையைச் சேர்ந்த இந்திரஜித் கயன் (வயது14) என்ற மாணவனே பலியாகியுள்ளார்.

வீட்டிற்கு குடிநீர் அள்ளிக்கொண்டு துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (41)

## யாழ்.குடாநாட்டில் துரிதப்படுத்தப்பட்டு வரும் அரச காணிகளை இனங்காணும் நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்கக் காணிகளை இனங்காணும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளதாக யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஸ் கூறியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருக்கும் அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளை இனங்கண்டு அவற்றை காணியில்லாது அல்லல்படும் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காகவே இக்காணிகள் இனம் காணப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளில் விசேட அதிகாரிகள் கொண்ட குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் இனங்காணல் நடவடிக்கைகள் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறியுள்ள யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ்,

இவ்வாறு இனங்காணப்படும் அரசாங்கக் காணிகள், காணி இன்றி அல்லலப்படுகின்ற குடும்பங்களைத் தெரிவு செய்தபின்னரே பகிர்ந்தளிக்கப்படும் என்று கூறினார். (33)

## நாளுக்கு நாள் அதிகரிக்கும் கடற்படையின் அத்து மீறல் கடற்றொழிலாளர்களின் வழமையான செயற்பாடு பாதிப்பு

யாழ். தீவகக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரது அடாவடித்தனங்கள் அதிகரித்திருப்பதால் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் வழமையான தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக தீவகக் கடற்பரப்பில் தமது ரோந்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் அதிகரித்துள்ள கடற்படையினர் கடற்பரப்பில் நின்றவாறு கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் மீது கடுமையான சோதனைக் கெடுபிடிகளைமேற்கொள்கின்றனர் படையினர் மீனவர்களது கடற்றொழில் படகுகளுக்குள் இறங்கி தேடு தல்களையும் மேற்கொள்வதுடன் மீனவர் களை மிரட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபடு கின்றனர்.

இதைவிட கடற்கரையில் நின்றவாறு கடற்பரப்பை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகமும் செய்கின்றனர்.

சிறிலங்கா கடற்படையினர் அண்மைக் காலமாக மேற்கொண்டுவரும் இந்நடவடிக்கையால் பெரிதும் பீதியடைந்துள்ள தீவக மீனவர்கள் வழமையான கடற்றொழிலுக்கு செல்லவும் அச்சம் தெரிவிக்கின்றனர்.. (33)

## ஒப்பந்தக்காரர்களின் இழுத்தடிப்பால் புங்குடுதீவுக்கான மின்சார விநியோகம் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒப்பந்தக்காரர்களது இழுத்தடிப்புகளால் யாழ். புங்குடுதீவுப்பகுதிக்கான மின்சார விநியோகம் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மின்சார சபையினர் தெரிவிக்கின்றனர்.

தீவகம்- புங்குடுதீவுக்கான மின்சார விநியோக நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையினரால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒன்றிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தனியார் ஒப்பந்த நிறுவனத்தினர் தமக்குள்ள வளப்பற்றாக் குறை களைக் காரணம்காட்டி புங்குடுதீவுப் பிரதேசத்துக்கான மின் இணைப்பு வேலைகளை இழுத்தடிப்புச் செய்து வருகின்றனர்.

இதனால் புங்குடுதீவிலிருந்து மின்சார விநியோகத்துக்காக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தீவக பணிமனையின் அதிகாரிகள் கூறினர். (33)

## தளபாடப் பற்றாக்குறையைப் போக்க நெதர்லாந்து உதவி செய்ய வேண்டும்

### - யாழ் மேலதிக அரச அதிபர் வேண்டுகோள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நிலவி வருகின்ற தளபாடப் பற்றாக் குறைகளைப்போக்க நெதர்லாந்து அரசாங்கம் உதவிகளை வழங்க வேண்டும் என்று யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்த நெதர்லாந்துத் தூதுவரை யாழ். அரச செயலகத்தில் வைத்து சந்தித்த சந்தர்ப்பத்திலேயே மேலதிக அரசஅதிபர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.


யாழ். மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை நிலவி வருகிறது. இது மாணவர்களின் கல்வித் தர மேம்பாட்டைப் பெரிதும் பாதித்துள்ளது. தளபாடப் பற்றாக்குறை காரணமாக யாழ். மாவட்டப் பாடசாலைகளில் மாணவர்கள் தரையில் அமர்ந்து தம் கல்வியைத் தொடர்கின்ற அவலநிலை காணப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியே மேற்படி கோரிக்கையை விடுத்த மேலதிக அரசஅதிபர் நெதர்லாந்து அரசு நிகொட் திட்டத்தினூடாக ஏற்கனவே பல பாடசாலைகளுக்கு தளபாட உதவிகளை வழங்கியுள்ளமைக்கு நன்றிகளையும் தெரிவித்தார். (33)

## வீதியில் சென்று கொண்டிருந்த மூன்று இளைஞர்களை கண்கள் கட்டிய நிலையில் கடத்திச் சென்ற படையினர்

பெருங்குளம் சந்தியில் கடந்த வெள்ளியன்று மதியம் இரண்டு மணி யளவில் உந்துருளி ஒன்றில் வந்து கொண்டிருந்த மூன்று இளைஞர் களை படையினர் பவள் கவச வாகனத்தில் கண்களையும், கால் களையும் கறுப்புப்பட்டிகளால் கட்டி இனம் தெரியாத முகாம் ஒன்றிற்கு கடத்திச் செல்லப்பட்டதாக தெரிய வருகிறது.

சம்பவ இடத்தில் நின்றிருந்த பொதுமக்களால் இச்சம்பவம் அவதானிக்கப்பட்டதை அடுத்து சம்பந்தப்பட்ட பெற்றோருக்கும் உறவினருக்கும் இச்சம்பவம் தொடர்பாக அறிவிக்கப்பட்டதை தொடந்து பெற்றோர் உறவினர்கள் முகாமை முற்றுகையிட்டதைத் தொடர்ந்து இவ் இளைஞர்கள் மூவரும் பவள் கவச வாகனத்தில் கொண்டு வரப்பட்டதாக தெரியவருகிறது.

பவள் கவச வாகனத்தில் கடத்தப்பட்ட இளைஞர்களின் கணகளை கட்டியபடியே தலை கீழாக தூக்கி நீண்ட தூரம் கொண்டு செல்லப் பட்டு முகாம் ஒன்றில் இறக்கப்பட்டு நன்கு தமிழ் தெரிந்த ஒருவர் இவ் இளைஞர்கள் மீது விசாரணை மேற்கொண்டதாகவும் பின்னர் அதேபவள் கவச வாகனத் தில் இவர்கள் தூக்கி எறியப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது இச்சம்பவம் குறித்து உடனடியாக போர் நிறுத்த கண்காணிப்பு குழு விடமும் யாழ் மனித உரிமை ஆணைக் குழுவிடமும் முறையிட்டதாக தெரியவருகிறது. (28)



*யாழ். இந்துக் கல்லூரியில் அமைக்கப் பட்டிருந்த மாவீரர் நினைவுத்தூபி படையினரால் அத்துமீறி உட்புகுந்து உடைத் தழிக்கப்பட்டுள்ளது (படம். (ம. ஆன்சலின் )*

## யாழ். தொழில்நுட்பக்கல்லூரி பற்றி ஆராய கொரிய பொறியியலாளர் குழு வருகை

யாழ்ப்பாண தொழில்நுட்பக்கல்லூரியின் தரமுயர்த்தல் நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக கொரியாவைச் சேர்ந்த பொறியியலாளர்குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

அடுத்தவாரம் யாழ்ப்பாணம் வரும் இக்கொரிய பொறியியலாளர் குழு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் தரமுயர்த்தல் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளதுடன் கொரியநாட்டு தொழில்நுட்பக் கற்கை நெறிகளை யாழ். தொழில்நுட்பக்கல்லூரி ஊடாக யாழ். குடாநாட்டுக்கு அறிமுகம் செய்வதிலுள்ள சாத்தியக் கூறுகள் பற்றியும் கொரிய நாட்டுநிதி உதவியுடன் யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கவுள்ளது (33)

## சுனாமி தாக்கி ஒருவருடமாகியும் பூரணமாகாத மீள் கட்டுமானப் பணி

சுனாமி ஆழிப்பேரலை யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளைத் தாக்கி ஒருவருடம் பூர்த்தியாகியுள்ள நிலையிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள் கட்டுமான நடவடிக்கைகள் எதுவும் பூரணமாக இடம் பெறவில்லை.

கடந்த ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தினால் யாழ். வடமராட்சியில் ஏராளமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டதுடன், வீடுகள் பொது இடங்கள், பாடசாலைகள் எனப் பெரும் சொத்தழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

இதைவிட தொழிலிழப்புக்கள், தொழில் ரீதியான பாதிப்புக்கள், உளரீதியான பாதிப்புக்கள் எனப் பல வகைப் பாதிப்புக்களை இம் மக்கள் சந்தித்துள்ள போதும் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை நிவர்த்தி செய்வதற்கான திருப்திகரமான திட்டங்கள் எதுவும் நடை முறைப் படுத்தப்படவில்லை. ஒருசில அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்ற போதும் அவையும் திருப்திகரமானதாகவோ, துரிதமானதாகவோ இல்லை.

இதனால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே ஓராண்டு கடந்தும் அடிப்படை வசதிகள் அற்ற இடைத் தங்கல் முகாம்களில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

அரசினதும், அதிகாரிகளினதும், தொண்டர் அமைப்புக்களினதும் அசமந்தப்போக்கே இந்நிலைமைக்கு காரணம் என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். (33)




# முதலாம் ஆண்டு நினைவினில் நாம்...



சுனாமியின்
கோரப்பிடியில்
26
-
12
-
2004



**திருமதி இலங்கேஸ்வரன் பிறேமலதா (தட்டெழுத்தாளர்)**
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
அலுவலகம், முல்லைத்தீவு

**திரு. ம. நவரட்ணராஜா (அலுவலக பணியாளர்)**
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
அலுவலகம், முல்லைத்தீவு

மக்களின் நலன்கருதி மனமகிழ்வுடன் நாம் அனைவரும்
மாண்புறு சேவை தனை ஒன்று கூடி ஆற்றிவந்தோம்.
எங்கிருந்தோ தோன்றிய கோர அலை உங்களைப்பிரித்ததுவே
ஆண்டு ஒன்று ஆனபோதும் உங்கள் நினைவுகளை
மறக்கமுடியாமல் அலை நடுவில் தேடுகின்றோம்.
உங்கள் முகங்களை...

என்றும் உங்கள் நினைவுடன்
பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர்,
பணியாளர்கள்.

பிரா.உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
அலுவலகம், முல்லைத்தீவு. (சி-13583)

# முதலாம் ஆண்டு நினைவினில் நாம்







| | | | | |
|---|---|---|---|---|
| திருமதி.சுப்பிரமணியம்-<br>கமலம்<br>1950-03-11 | ஜெயக்குமார்<br>வான்மதி<br>1969-06-28 | ஜெயக்குமார்<br>யாழினி<br>0[illegible]-1995 | ஜெயக்குமார்<br>சுதர்சன்<br>17-03-1997 | ஜெயக்குமார்<br>ஜெயராஜ்<br>01-11-2000 |

சொந்துங்கள் எப்போதும் நிலையானதே
சந்திரனைப்போன்ற அழகிய எங்கள்
குடும்பக்குல விளக்குகளை சுனாமி அழித்ததுவோ
கூடி குதூகலித்து வாழ்ந்த எம் வாழ்க்கையை
வானுயர வந்த கடலலை காவீச் சென்றது
பாடித்திரிந்து ஓடிவிளையாடிய எம் மழலைச்
செல்வங்களையும்
பாய்ந்து வந்த அலை பறித்துச் சென்றதே
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை
எம்மனது
ஆற்றாது துடிக்கின்றோம் ஒரு முறை
வாருங்கள்

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

(சி.13585)

# முதலாம் ஆண்டு நினைவினில் நாம்



சுனாமியின் கோரப்பிடியில்
26-12.2004

திருமதி. ரவீந்திரநாதன்-
ஸ்ரெலாமேரி
18-03-1967
வண்ணாங்குளம் முல்லை

பரமானந்தராசா-
குவேந்தினி
06-11-1989
கள்ளப்பாடு.முல்லை

பரமானந்தராசா-
அருணராஜ்
26-08-1998
கள்ளப்பாடு.முல்லை

பரமானந்தராசா-
ராஜினி
30-11-1969
கள்ளப்பாடு.முல்லை

பரமானந்தராசா
சங்கவி
27-04-1995
கள்ளப்பாடு.முல்லை

உடல்களைப் பறித்தாய்
உறவுகளைப் பறித்தாய்
உனக் கென்ன தீங்கு செய்தோம்
இப்பாரினில் வாழும் உன் பங்காளிகள் நாம்
ஏன் எமக்கிந்த சோதனை-நீ
கொதித்தெழுந்து வற்றி விட்டாய்-ஆனால்
எம் கண்ணீர்க் கொந்தளிப்பு
என்று தான் வற்றுமோ என
தேடி அலைகின்றேன்.......

வற்றாப்பளை
முள்ளியவளை

என்றும் உங்கள்
நினைவுடன்
சு.சிவவதனி
NEHRP/THRP
கச்சேரி
முல்லைத்தீவு

(7106)

## முதலாம் ஆண்டு நினைவினில் நனைகின்றோம்.

தாயின் மடியில் 23 - 03 - 1997



தாயின் மடியில் 25 - 01 - 1990

அலையின் கரத்தில் **-26-12-2004**

**இராசரத்தினம்-ராகுலன்** **இராசரத்தினம்-தேவரஞ்சினி**

**தீர்த்தக்கரை, சிலாவத்தை.**

*ஒரு கொடியினில் பூத்த*
*இருமலர்களே!*
*ஒருவரை ஒருவர் விட்டுப்*
*பிரியாத தெய்வங்களே!*
*சுனாமி உங்களை எம்மிடம்*
*இருந்து பிரித்ததுவோ!*
*ஆண்டு ஒன்று ஆனாலும்*
*ஆறவில்லை எம்மிதயம் தேடுகின்றோம்*
*உங்கள் முகங்களை கடல் அலைகளில்...*

**தீர்த்தக்கரை,**
**சிலாவத்தை.**

என்றும் உங்கள் நினைவுடன்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்.

(7104)

## சுனாமியின் கோரத்தாண்டவத்தில் முதலாம் ஆண்டு நினைவினில்...

அன்னை மடியில் 14 - 04 - 1982



ஆழியின் அலையில் 26 - 12 - 2004

**ரங்கநாதன் ரங்கேஸ்வரன்**
**சிலாவத்தை, முல்லைத்தீவு**

சிரித்த முகத்துடன் என்றும்
வலம் வரும் -ரதனே!
குடும்பச்சுமையினை மனமகிழ்வுடன் ஏற்று
கடமைபுரிந்தவனே!
சுனாமி என்னும் கோர அரக்கன்
உன்னை காவு கொண்டதோ!
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை
எம்மனது துடிக்கின்றோம்.

**சிலாவத்தை,**
**முல்லைத்தீவு.**

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்.

(7102)

# ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தில் ஆகுதியான உங்களின் நினைவுகளுடன்



துரைச்சாமி கிருஸ்ண்பிள்ளை
05-10-1940



செல்லத்துரை ரவிச்சந்திரன்
பிறப்பு- 22-03-70 இறப்பு-09-09-96



செல்லத்துரை சக்திவேல்
31-07-1972



செல்லத்துரை செல்வரஞ்சிதம்
10-06-1972



புவனேந்திரன் யதீஸ்
20-04-2002



ஜெயசீலன் நிதர்சனா
12-03-2004



புவனேந்திரன் தர்சினி
04-01-1994



புவனேந்திரன் பேபிரஞ்சினி
24-10-1969



புவனேந்திரன் தர்சன்
08-01-2000

**26-12-2004**

வத்திராயன் வடக்கு,
தாளையடி.

குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளில்...

8ஆம் ஆண்டு நினைவுகளில்...

ஆழிப்பேரலை ஆண்டொன்றின் நினைவுகளில்...




## நெஞ்சை விட்டு அகலாத
## முதலாம் ஆண்டு நினைவலைகள்







| இரவிச்சந்திரன் கபில்நாத் | இரவிச்சந்திரன் சோமேஸ்வரி | இரவிச்சந்திரன் சோபிகன் |
|---|---|---|
| பிறப்பு 17.06.1996 | பிறப்பு 08.07.1970 | பிறப்பு 11.11.200 |

**சுனாமியின் பசிக்கு::26. 12. 2004**


சுனாமி எனவந்தா காலன்
அழைத்தானோ உங்களை
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாது எங்கள் துயர்
துடிக்கின்றோம்—நாங்கள்
உங்கள் நினைவுகளைச் சுமந்து

26.12.2005 திங்கள் அம்பலவன்பொக்கணையில் உள்ள எங்கள் இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு, உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவுடன்,
பொ.இரவிச்சந்திரன்(சிவா)
குடும்பத்தினர்,
அம்பலவன்பொக்கணை,
முல்லைத்தீவு.

(சி-13625)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



26. 12. 2004அன்று சுனாமிஆழிப்பேரலையினால்
கட்டைக்காட்டுப் பகுதியில்
சாவடைந்த எமது மக்களுக்காகவும்
அதே தினத்தில் ஏனைய பிரதேசத்தில்
உயிர்நீத்த அனைத்து மக்களுக்காகவும்
எமது இதய அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்

சென் மேரிஸ்
க,தொ.கூ.சங்கம்
கட்டைக்காடு
முள்ளியான்.

(7160)

## ஓராண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில்
1968
04
13



ஆண்டவன் மடியில்
2004
12
26

### வேலு ஜோதிநாதன்

ஆண்டு ஒன்று ஆனாலும் - மைத்துனரே
ஆறவில்லை எம் இதயம்
வாழ்ந்திடும் காலமெல்லாம்
மறப்போமா உன் முகத்தை
மறக்க முடியவில்லை
வருந்தி நாம் அழைக்கின்றோம்
திரும்ப வந்து சேர்ந்திடுவீர்.

என்றும் தங்கள் பிரிவை
தாங்காது மீண்டும் தங்கள்
பாசத்திற்காக ஏங்கும்
மைத்துனர் எஸ். காந்தன்.

முகவரி
7ஆம் வட்டாரம்.
சிவநகர். புதுக்குடியிருப்பு.

(7176)

## முதலாம் ஆண்டு நினைவில் நாம்

சுனாமிக் கோர அலையில் – 26–12–2004



எங்கள் ஆருயிர் அம்மாவே
எங்கள் அன்புச் சகோதரங்களே
ஆழிப்பேரலை எங்களைப்பிரித்ததுவோ
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எம்மனது
வருவீர்களோ எம்மிடம்

| தாய் மடியில் 25 08 1960 | தாய் மடியில் 13 08 1994 | தாய் மடியில் 13 03 2002 |
|---|---|---|
| திருமதி ராசன் நாகேஸ்வரி | செல்வன் ராசன் ஜோய் | செல்வி ராசன் கனிஸ்ரா |

என்றும் உங்கள் நினைவுடன்

கணவன், பிள்ளைகள்
மருமக்கள்.

கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.

(சி-13624)

## ஓராம் ஆண்டு நினைவில்...



திருமதி
**கு. நாகரத்தினம்**

வெற்றிலைக்கேணி,
முள்ளியான்.

*பிறப்பு:* 01-02-1973
*இறப்பு:* 26-12-2004

**இல்லறமாம் சோலையிலே**
**இணைந்தே வாழ்ந்திடும் வேளைதனில்**
**இயற்கைத் தாய் ஆழிப்பேரலை எனும் வடிவினிலே**
**கல்லறைக்காய் உன்னைக்காவு கொண்டதேனம்மா.**

தங்கள் நினைவுடன் வாழும்
கணவர்
**கி. வண்ணம்**

(7174)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி




**சுமதி**

**அலை கடல் மீதினிலே**
**அமைதி கொண்ட அன்னையே**
**அழுதுகொண்டு தேடுகின்றோம்**
**உன் முகத்தைக் காணவில்லை**
**ஓராண்டு போனதம்மா**
**உன் மொழியே கேட்கவில்லை**
**கண்ணீர் மல்கி வாடுகின்றோம்**
**உன் நினைவை நெஞ்சில் கொண்டு.**

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**பிள்ளைகள்.**

(6964)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



| | பிறப்பு | இறப்பு |
|---|---|---|
| சந்திரகுமார் உதயசசி | 1977-11-26 | 26-12-2004 |
| சந்திரகுமார் தனுசியன் | 2002-05-23 | |
| சக்திவேல் சர்மினி | 2000-01-17 | |
| சக்திவேல் விதுஷா | 2002-12-03 | |

பட்டாம் பூச்சியாய் சிறகடித்த பச்சைக் கிளிகளே - நீங்கள்
பறந்தோடி எங்கே பதுங்கிக்கொண்டீர்கள்
பாசம் கொண்ட உறவுகள் நாம் கலங்குகிறோம் - உம்
பாதம்பட்ட இடமெங்கும் தேடுகின்றோம்.
இறுதிக் கணத்தினிலே உங்கள் இனிய முகம் கண்டிருந்தால்
இதயம் சிறிது நிம்மதி கொண்டிருக்கும்
இனி எப்பிறப்பில் உங்களைக் காண்போமோ - ஓர்
தடவை எம் அருகே வரமாட்டீர்களா!


வடமராட்சி கிழக்கு,
ஆழியவளை.

உங்கள் பிரிவால் துயரும்,
**குடும்பத்தினர்,**

(7152)

### சுனாமிப் பேரலையால் உயிர் நீத்த எமது அன்புச் செல்வங்களின்

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



**ம. கௌதமன்**

*பிறப்பு: 1997-11-19* *இறப்பு: 2004-12-26*



*பிறப்பு:* 1982 07 12

*இறப்பு* 2004 12 26

**யோ. நாகினி**



*பிறப்பு:* 2000 01 05

**பா. லதீசன்**

பள்ளி வயதில் துள்ளித்திரிந்த
பாலகனே கௌதமா
ஆம் ஆண்டு படிக்கையிலே
ஆசிரியர் சொற்படி நடந்த
அன்பு மகனே
அன்னை தந்தையரை
தவிக்கவிட்டு
அனாதையாய் எங்கு சென்றாய்
உன் பிரிவால் இங்கே
உறவுகள் தவிக்குதடா
ஓராண்டு சென்றாலும் உம்
நினைவு எம்மை விட்டு அகலாது.

ஆழிப்பேரலையில் அகப்பட்ட எம் செல்வங்களே
அன்போடு அரவணைத்த தாகத்தை, தணித்திருக்க
நீங்கள் மட்டும் எமை விட்டு எங்கு சென்றீரோ
பள்ளிப்பருவத்தில் துள்ளிக்குதித்த உங்கள்
கால்கள் துவண்டனவோ
அம்மம்மா அப்புச்சி என்று சொல்லி
ஆசை காட்டியதேனோ

அப்பம்மா அப்பப்பா எனச் சொல்லி
அன்பு காட்டியதேனோ
அக்காமார் அண்ணன்மார் மாமாமார் அத்தைமார்
சித்தப்பாமார் சித்திமாருடன் சண்டையிட்டதேனோ
ஓராண்டு இல்லை ஐயா ஒன்பது ஆண்டுகள்
சென்றாலும் உமது பூ முகங்களை
மறக்க முடியவில்லை.

செல்வங்களின் நினைவில்
சி. மனோகரன்

**குடும்பத்தினர்,**
வத்திராயன் வடக்கு.

(7151)

அண்மைக் காலமாக தீவிரமாகப் பேசப்பட்டுவரும் சுனாமி (Tsunami) என்ற வார்த்தைக்கு நீண்டகால வரலாறு உண்டு. ஆனால் எமது பிரதேசத்தையும் அதனை அண்டிய ஆசிய பிரதேசங்களையும் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி தாக்கிய பேரலையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. உலகில் பல்வேறு இயற்கை அனர்த்தங்கள் காலத்திற்குக்காலம் ஏற்படுகின்றன. இந்த அனர்த்தங்களில் ஒன்றான கடலடி நிலநடுக்கத்தால் ஏற்படும் பேரலைகள் யப்பான் மொழியில் சுனாமி என அழைக்கப்படுகின்றன.

கடலடி நிலநடுக்கம், கடலடி எரிமலை, புவிமேற்புறத் தகடுகளின் உராய்வு என்ற முக் காரணங்களினால் ஆழிப் பேரலைகள் எழுகின்றன. கடலின் மேற்புறத்தில் காணப்படும் வழமையான அலை காற்றின் அழுத்தத்தாலும், சூரியன், சந்திரன் ஈர்ப்பினாலும் இரவு பகலாகத் தொடர்ந்து நடைபெறுகின்றது. ஆழிப் பேரலைகள் எதிர்பாராத சடுதி நிகழ்ச்சி. இதன் காரணமாக ஏற்படும் அழிவுகளும் மிகக் கூடுதலாக இருக்கின்றது.

கி.மீ வரையிலான தடிப்புள்ள ஏழுபெரிய தகடுகளையும் 20 சிறிய துண்டங்களையும் கொண்டுள்ளது. இவை ரெக்ரோனிக்பிளேற்ஸ் (Tectonic Plates) எனப்படுகின்றன. இவை தமிழில் கண்டத் தகடுகள் என்று அழைக்கப்படுகின்றன. கண்டங்களும் இத்தகடுகளின் மேற்புறத்தில் இருப்பதனால் தகடுகள் நகரும்போது அவையும் சேர்ந்து நகருகின்றன. கண்டப் பெயர்ச்சி என்ற கோட்பாடு 1910 இல் அல்பிரட் உவெக்னர் (ALFRED WEGNER) என்ற ஜேர்மன் விஞ்ஞானியால் உருவாக்கப்பட்டது. இவருடைய கூற்றுப்படி 200 மில்லியன் வருடங்களுக்கு முன் ஒரேயொரு கண்டம் மாத்திரம் இருந்ததாகவும் அது பகுதி பகுதியாகக் காலப்போக்கில் உடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. உடைவுக்கு புவித்தகடுகள் காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. 1960 கள் வரை உவெக்னரின் கோட்பாடுகள் எடுபடவில்லை. தகடுகளின் இருப்பும் செயற்பாடுகளும் இக்காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் கண்டப் பெயர்ச்சிக் கோட்பாடு வலுப்பெற்றது. தகடுகள் அசைவதற்கான அமைகின்றன.

புவி நடுக்கத்தின் வலு அளவீடு ரிச்டர் ஸ்கேல் (Richter Scale) என்று அழைக்கப்படுகின்றது. புவிநடுக்க அளவீட்டை உருவாக்கியவர் சாள்ஸ் ரிச்டர் என்ற அமெரிக்கப் புவியியல் விஞ்ஞானி. அவர் இவ் அளவீட்டை 1935 இல் உருவாக்கினார் இந்த அளவீட்டின்படி ஒன்று அல்லது இரண்டு வலுவுள்ள புவிநடுக்கத்தால் யாதொரு ஆபத்துமில்லை. அவற்றை உணர்வதும் கடினம். வலுக்கூடியவை பத்து ரிச்டர் வரை செல்கின்றன. அவை பேரழிவை ஏற்படுத்துகின்றன.

டிசெம்பர் 26, 2004 ஆம் திகதி சுமத்திரா தீவின் ஆச்சே மாநிலத்திற்கு அருகாமையிலுள்ள கடலில் ஏற்பட்ட மிகப்பிரமாண்டமானதொரு நிலநடுக்கம் பூமியின் அச்சை உலுக்கியதோடு பூமியில் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியது. இந்த நிலநடுக்கத்தின் ரிச்டர் அளவீடு ஒன்பது என்று கணிக்கப்பட்டுள்ளது. 1964 மார்ச் 27 ஆம் திகதி அமெரிக்காவின் 49 ஆவது மாநிலமான அலஸ்காவின் மிகப் பெரிய

அமெரிக்காவின் ஒரு மாநிலமான ஹவாய்த் தீவுத் தொகுதி அமெரிக்காவின் கலிபோர்னியாக் கடலோரத்திலிருந்து 3,800 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இத்தீவுகளில் சுனாமித்தாக்கம் அதிகளவில் உண்டு. இங்கு வாழும் மக்கள் கடலின் குண இயல்புகளை நன்கு உணர்ந்து உயிர்வாழக் கற்றுள்ளனர். கடல்நீர் வெகுதூரம் பின்நோக்கிச் செல்வதைக் கண்டால் இத்தீவு மக்கள் எதிர்த்திசையில் ஓடி மேட்டுப் பகுதிகளில் தஞ்சம் புகுவார்கள். சுனாமித்தாக்கம் குறைந்த பின்னர் திரும்ப சொந்த இடத்திற்கு வருவார்கள். இது அவர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளாகும்.

இதுபோல இலங்கையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமாயின் மக்கள் முன்னெச்சரிக்கையுடன் வாழ வேண்டும். கடற்கரையோரத்தில் வாழ்வதை முடிந்தவரை தவிர்க்கலாம். மேலும் மிக முக்கியமான இடங்களிற்கு தடுப்புச் சுவர்களை எழுப்புவதன் மூலம் ஆழிப்பேரலையின் மூச்சைத் தணிக்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# இயற்கை அனர்த்தங்களில் சுனாமி

பசுபிக் சமுத்திரத்தில் யப்பான் தொட்டு கலிபோர்னியா வரையிலான பகுதிகளில் நிலநடுக்கங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. இதனால் இந்தப் பகுதியை "நெருப்பு வளையம்" (Ring of Fir) என்று சொல்லப்படுகிறது. இத னால் கூடுதலாக யப்பான் தீவுகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் இவ்வகை அலைகளுக்கு யப்பான் நாட்டவர் வைத்த பெயர் எல்லா நாட்டுக்கும் பொதுவான சொல்லாக வழங்கப்படுகின்றது 'நாமி' என்றால் அலைகள் 'ற்சு' என்றால் துறைமுகம் அல்லது ஒடுக்கமான நிலப்பகுதி என்ற இரு சொற்களின் கூட்டாகும். சுனாமி என்றால் புயல் என அர்த்தம் கொள்வோரும் உள்ளனர்.

பலநூறு கிலோமீற்றர் நீளமானதாகவும், 10 மீற்றருக்கும் கூடிய உயரமுடையதாகவும், ஜெற் விமானத்தின் பறப்பு வேகத்திலும் கூடிய வேகமுடையதாகவும் சுனாமி அலைகள் இடம்பெறுகின்றன. டிசெம்பர் 26 ஆம் (2004) திகதி சுனாமி அலை 600 கி.மீ தூரத்தை 75 நிமிடங்களில் கடந்தது. இது மணிக்கு 480 கி.மீ வேகம் ஆகும். கடலின் ஆழமான பகுதிகளில் சுனாமி அலைகளில் உயரம் அசாதாரணமாக இருப்பதில்லை. அப்படியான கடலில் பயணிக் கும் கப்பல்களின் கீழால் சுனாமி அலைகள் செல்வதை கப்பலில் இருப்போர் அவதானிப்பது கடினம். கரையை நெருங்கும்போது சுனாமி அலைகள் உயரக் கிளம்புகின்றன. 1960 இல் தென்அமெரிக்காவின் சிலி நாட்டுக் கரையோரத்தில் 8.5 ரிச்டர் வலுவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது. இதிலிருந்து கிளம்பிய சுனாமி அலைகள் பசுபிக் மாகடலைக் குறுக்கறுத்துப் பாய்ந்து யப்பான் கரையோரம் வரை சென்றது. இதனால் யப்பான் பேரழிவைச் சந்தித்தது. பசுபிக் மாகடலின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு 24 மணி நேரத்தில் சுனாமி அலைகள் முன்னோக்கிச் செல்ல முடியும். இலங்கையின் கிழக்கு வடக்கு தெற்குப் பகுதிகளைத் தாக்கி அலைகள் 1400 கி.மீ தூரத்தைக் கடந்து வந்துள்ளன. இத்தூரத்தைக் கடப்பதற்கு அவை ஒன்றரை மணிநேரம் எடுத்தன. அலை வருவது பற்றி முன்னறிவித்தல் கிடைத்திருந்தால் பல மனித உயிர்களையும் பெறுமதிமிக்க சொத்துக்களையும் காப்பாற்றியிருக்க முடியும்.

பொதுவாக உலகில் தோன்றும் புவி நடுக்கங்கள் மூன்று முக்கிய காரணிகளால் ஏற்படுகின்றன.


1) புவி தகட்டோட்டு நகர்வு நிலநடுக்கம்

2) எரிமலைகளின் செயற்பாட்டு நிலநடுக்கம்

3) பாதாளத்துக்குரிய நிலநடுக்கம்

புவிமேலோடு 40 கி.மீ தொடக்கம் 800

காரணம் பூமியின் அசாதாரண உள்வெப்பம் எனப்படுகின்றது. பூமியின் உட்புற வெப்பம் 5000 பாகை பரனைற் வரை என விஞ்ஞானிகள் மதிப்பிடுகின்றனர். இதனால் எல்லாக் கண்டங்களும், அசைந்துகொண்டு இருக்கின்றன.



நோர்வேயின் பேர்கன் பல்கலைக்கழகப் பேராசிரியர் கார்ஸ்ரன் ஸ்ரொறெற்வெற் (Karsten storetvedt) என்பவர் வெளியிட்ட கருத்துப்படி பூமி தன்னைத்தானே சுற்றுவதால் ஏற்படும் நீர், நிலக்குலுக்கல் பூமியின் நடுப் பகுதியில் இருக்கும் உலோகம் செலுத்தும் புவியீர்ப்பு என்பவற்றையும், தகட்டு அசைவின் கூட்டுக் காரணங்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

*உலகில் மிகக் கூடுதலான சுனாமி அலைகள் பசுபிக் மா கடலில் தான் தோன்றுகின்றன. இதற்கு ஆயிரத்துக்கும் அதிகமான எரிமலைகள் பசுபிக் கடலடியில் இருப்பது காரணமாக இருக்கிறது. மிகக் கூடுதலாகச் சுனாமியால் பாதிக்கப்படும் நாடுகளில் யப்பான் முதலிடம் வகிக்கிறது. அமெரிக்காவின் மேற்குக் கரைப்பகுதியும் ஹவாய்த் தீவுகளும் அடுத்த இடம் வகிக்கின்றன. இந்த நாடுகள் ஏற்கனவே அனுபவப்பட்டதனால் சுயபாதுகாப்புக் கருதி மிகவும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளன.*

பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் புவி நடுக்கங்கள் மேற்கூறிய தகடுகள் உராயும்போது அல்லது பலமாக மோதும்போது ஏற்படுகின்றன. அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சிக் கழகம் (US Geological Survey) வெளியிட்ட தரவுகளின்படி வருடமொன்றுக்கு மூன்று மில்லியனுக்கும் கூடுதலான புவிநடுக்கங்கள் ஏற்படுகின்றன. அதாவது நாளொன்றுக்கு 8,000 புவி நடுக்கங்கள் என்ற விகிதத்தில் ஏற்படுகின்றன. ஆனால் சில வருடங்களிற்கு ஒருமுறை ஏற்படுபவைதான் உயிரழிவையும், பொருட் சேதத்தையும் ஏற்படுத்தும் வலுவுள்ளவையாக

நகரமான அன்கரேச் (Anchorage) பகுதியை உலுக்கிய நிலநடுக்கத்திற்கு நிக ரானதாக சுமத்திராவின் ஒன்பது அளவீடு இடம்பெறுகிறது. 26 ஆம் திகதிக்குப் பின் தொடர்ச்சியாக சில நில நடுக்கங்கள் இப்பகுதியில் ஏற்பட்டுள்ளன. அவற்றில் சராசரி அளவீடு ஐந்து ரிச்டர் அளவாகும். சுனாமி எங்கும் நடக்கலாம், எப்போதும் நடக்கலாம் என்பது மறுக்க முடியாத உண்மையாக இருப்பினும் உலகில் மிகக் கூடுதலான சுனாமி அலைகள் பசுபிக் மாகடலில் தான் தோன்றுகின்றன. இதற்கு ஆயிரத்துக்கும் அதிகமான எரிமலைகள் பசுபிக் கடலடியில் இருப்பது காரணமாக இருக்கிறது. மிகக் கூடுதலாகச் சுனாமியால் பாதிக்கப்படும் நாடுகளில் யப்பான் முதலிடம் வகிக்கிறது. அமெரிக்காவின் மேற்குக் கரைப் பகுதியும் ஹவாய்த் தீவுகளும் அடுத்த இடம் வகிக்கின்றன. இந்த நாடுகள் ஏற்கனவே அனுபவப்பட்டதனால் சுயபாதுகாப்புக் கருதி மிகவும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளன. கருத்தூட்டல் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. யப்பானியப் பல்கலைக்கழகங்களில் இது பற்றி ஆய்வுகளுக்கு ஒரு கல்விப்பீடம் ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக பசுபிக் கடலடியில் நிறுவப்பட்ட முன்னறிவித்தல் சாதனங்கள் மூலம் தரைக் கட்டுப்பாட்டு நிலையங்களுக்கு தகவல் வழங்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் இந்துமாகடலைச் சூழ்ந்த நாடுகளுக்கு இதுபற்றிய முன் அனுபவம் இல்லாதபடியாலேயே பேரழிவுகளைச் சந்தித்துள்ளது. தற்பொழுது இப்பிரதேசங்களிலும் யப்பான் போன்ற பாதுகாப்பு நடவடிக்கை களை மேற்கொள்வதற்கான பேச்சுக்கள் அடிபடுகின்றன.

*பாதிப்புக்களின் தன்மைகள்*

புவிநடுக்கங்கள் எரிமலைகள் சுனாமிகள் எனப்படும் பெருக்கு அலைகள் என்பவற்றினால் உலகிலேயே பேரழிவுச் சூழலைக் கொண்ட யப்பான் தேசம் பசுபிக் தட்டு விளிம்புப் பகுதிகளிலேயே அமைந்துள்ளது. யப்பானில் 54 உயிர்ப்பு எரிமலைகளும் 106 உறங்கு எரிமலைகளும் உள்ளன. கடந்த நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஏழு பெரிய புவிநடுக்கங்கள் யப்பானில் குறிப்பிடத்தக்க பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. "குவான்ரோ" (Kwanto Earth Quakes) என்னும் இடத்தில் 1923 இல் ஏற்பட்ட புவி நடுக்கத்தினால் 1,40,000 பேர் உயிரிழந்தனர். இதனால் 7,10,000 வீடுகள் அழிந்தன. 1906 ஏப்ரல் 18 ஆம் திகதி அதிகாலை கலிபோர்னியாவில் "சான்பிரான்சிகோ" எனும் இடத்தில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் சான்பிரான்சிகோ நகரின் கீழ் அமைந்திருந்த "சன்அன்றீஸ்" பிளவு (San Andreas Fault)களில் 6.4 மீற்றர் நகர்வு (Displacement) ஏற்பட்டது. இத்தகைய நகர்வு பாரிய அழிவுகளை மேற்பரப்பில் ஏற்படுத்தியது.

இவ்வாறான அனர்த்தங்கள் பசுபிக் மாகடலில் அதிகமாக நடந்தாலும் இந்துமாகடல் அத்திலாந்திக்மாகடல் போன்றவற்றிலும் காலத்திற்குக் காலம் ஏற்படுவதை வரலாறு உணர்த்திநிற்கின்றது. நவீன ஐரோப்பிய வரலாற்றில் மிகப்பெரும் சேதத்தை விளைவித்த ஆழிப்பேரலை 250 வருடங்க ளுக்கு முன்பாக நவம்பர் 01, 1755 ஆம் திகதி போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்றது.

போர்த்துக்கல் நாட்டின் கடலோரத்தில் நடந்த கடலடிப் புவிநடுக்கம் பிரமாண்டமான அலைகளைக் கிளப்பியது. தலைநகர் லிஸ்பன் (Lisban) மீது மோதிய கடலலைகள் லிஸ்பனில் மாத்திரம் 30,000 வரையிலான மனித உயிர்களைக் காவு கொண்டது. ஐரோப்பாவின் அப்போதைய நான்காவது மிகப்பெரிய நகரமாகவும் ஐரோப்பாவின் அதியுச்ச செல்வந்த நகரங்களில் ஒன்றாகவும் இருந்த லிஸ்பன் தனது பழைய நிலைக்குத் திரும்பாமல் இன்றுவரை நலிவுற்றே காணப்படுகின்றது.

போர்த்துக்கல் நாட்டின் தென்கரையோர தென்மேற்குக் கரையோரம், தென்மேற்கு

ஜெ.கெங்காதேவி
கிளி/கிளிநொச்சி மத்தியகல்லூரி

ஸ்பெயின் வட ஆபிரிக்கா என்பனவும் இவ் ஆழிப்பேரலையால் பாதிப்படைந்தன. பெல்ஜியம், பிரித்தானியா, பிரான்ஸ், அயர்லாந்து, நெதர்லாந்து என்பனவும் போர்த்துக்கல்லுக்குச் சொந்தமான அத்திலாந்திக் கடலின் நடுவிலுள்ள அஸோஸ் தீவுகளும் கரையோர அழிவுகளைச் சந்தித்தன. அன்று பதிவான உயிர்தப்பியோரின் வாக்கு மூலங்களின்படி அண்மையில் நடந்ததுபோல் கடல் பின் நோக்கிச் சென்று சிறிது நேரத்தின் பின் முழு மூச்சுடன் முன்னோக்கி வந்து தரைப் பகுதிக்குள் புகுந்து அழிவை ஏற்படுத்தியது என்பதாகும். உயிர்ச்சேதத்துடன் பொருளாதார ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்ட போர்த்துக்கல் நாட்டில் இன்றும் ஆழிப்பேரலையின் பீதி தீரவில்லை என்று கூறப்படுகிறது.

# சுனாமி தாக்கி ஓராண்டாகியும் மக்களின் துயரம் தொடர்கிறது



**தமிழீழ கடற்படைச் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்களின் சிறப்புப் பேட்டி**

அ. லோகீசன்

தமிழர்கள் என்றுமே அறிந்திராத வகையில் இயற்கைப் பேரனர்த்தம் நிகழ்ந்து இன்றுடன் ஒருவருடம் நிறைவடைகிறது. எமது கரையோர நிலமும் கரையோர மக்களும் அவர்களின் உழைப்பால் உயர்ந்த வாழ்வும் இயற்கையின் சீற்றத்தால் சிதைந்து போய்விட்டது. கலகலப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தவர்கள் சில நிமிடங்களில் சாகடிக்கப்பட்டார்கள். மெதுமெதுவாக எழுந்த கட்டுமானங்கள் மண்ணோடு மண்ணாகிப் போனது. எவராலும் நம்பிவிட முடியாத அந்தக் கோரமான நிகழ்வை கடல் நிகழ்த்தி விட்டுப் போயிருந்தது.

பெரும் யுத்த சூழலுக்குள் சிக்கி வாழ்வா? சாவா? என்று தெரியாது வாழ்ந்துகொண்டிருந்த போதுதான் ஒரு சமாதானச் சூழல் உருவானது. இதனை வைத்து கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை மேம்படுத்திக்கொண்டனர். அதன் மூலம் அந்த மக்களின் பொருளாதாரம் வளம் பெற்றது. இதன்மூலம் யுத்த வடுக்கள் மக்களைவிட்டு அகன்றுகொண்டிருந்தன.

கரையோரம் புதுப்பொலிவடைந்து கொண்டிருந்தது. இந்நிலையில் கடலலைகள் மூர்க்கமாக எழுந்து கரையை கடலுக்குள் அமிழ்த்தியது. இதன்போது யார் எவர் என்றில்லாமல் எல்லோருமே கடலுடன் அடித்துச் செல்லப்பட்டனர். தமிழர்கள் எப்போதும் சந்தித்திராத உயிர், உடமை இழப்புக்களை சில மணித்துளிகளில் சந்திக்க நேர்ந்தது. இதனால் தமிழீழத்தின் பொருளாதாரத்தை உயர்த்தும் தொழில் முறைகளில் முக்கியம் வாய்ந்த கடற்றொழில் உயிரற்றுப் போய்விடும் என்ற அச்சம் அனைவருக்கும் உருவானது உண்மை



யும் இதுதான். இவ்வாறு தமிழீழக் கடற்படைச் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்தார். சுனாமிப் பேரலைகள் தாக்கி ஒரு வருடம் நிறைவடைவது குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அளித்த செவ்வியை இங்கு தருகிறோம்

**பேரழிவுக்குள்ளான இந்த மக்கள் மன அளவில்கணிசமானளவு மீண்டிருக்கிறார்கள்.**

இந்த அவலத்தில் பலர் தமது குடும்பங்களை முழுமையாகப் பறிகொடுத்திருந்தனர். அதேபோல கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வரும் அனைத்து மக்களுமே பேரிழப்பைச் சந்தித்திருந்தனர். ஒவ்வொருவரது உறவுகளும் அவர்களின் கண்முன்னால் கடலோடு அடிபட்டுப்போனார்கள். வியர்வை சிந்தி உழைத்துச் சேர்த்த சொத்துக்கள் இருந்த இடமே தெரியாமல் போனது.

இத்தகைய இழப்புக்களில் இருந்து மீள்வது என்பது மிகவும் சாதாரணமான விடயமல்ல. இதிலிருந்து உயிர் தப்பியவர்கள் இறந்தவர்களை விட மோசமாக இருந்தார்கள். அவலத்தை நேரில் பார்த்த அதிர்ச்சி; அதைவிட உறவுகளின் இழப்பு இவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாது பலர் மனநிலை பாதிப்புக்குள்ளாகிப் போயிருந்தார்கள்.

ஆனாலும் எவரும் எதிர்பார்க்காத அளவுக்கு அவர்களின் மனநிலை மாற்றமடைந்து வருகிறது. அந்த அதிர்ச்சிகளில் இருந்து தம்மை விடுவித்துக்கொண்டிருக்கிறார்கள். சுனாமி அடித்தபொழுதும் அதன்பின்னான சிலகாலம் வரையும் இந்த மக்கள் கடலை நோக்கி வருவதற்கே அச்சமடைந்திருந்தார்கள்.

பாதிக்கப்பட்டிருந்த பெரும்பாலான மக்களுடன் நான் நேரில் கதைத்தேன். கடற்றொழிலில் பெரும்புள்ளிகளாக இருந்தவர்களே தாம் கடலுக்கு வரமாட்டோம் என்று கூறியிருந்தார்கள். இந்த நிலையில் மக்கள் கடலைவிட்டு விலகிவிடுவார்களோ? என்ற அச்சம் எமக்குள்ளும் எழவே செய்தது. ஆனால் நாட்கள் நகர நகர மீண்டும் கடலோடு ஒன்றாக வாழ்வதற்கும் தொழிலில் ஈடுபடுவதற்கும் அவர்கள் துணிந்து விட்டார்கள்.

தமது சோகத்தில் இருந்து கணிசமான அளவு வெளியேவந்து விட்டார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

**மீன்பிடித்தொழில் பழைய நிலையை எட்டவில்லை.**

மீன்பிடித்தொழில் பழைய நிலையை எட்டாதமைக்குப் பல காரணங்கள் உள்ளன. கடற்றொழிலில் ஈடுபடுகின்ற தொழில் திறன்மிக்க தொழிலாளர்கள் உயிரிழந்துவிட்டார்கள். அவர்களின் சொத்துக்கள் தொழில் உபகரணங்கள் என்பன கடற்கொந்தளிப்பால் அழிந்து போய்விட்டன. இப்படியான நிலையில் எஞ்சியுள்ளவர்களும் ஏனையவர்களும் இழப்புக்களில் இருந்து விடுபட்டு தொழிலில் ஈடுபடுவதற்கு முயல்கிறார்கள்.

அவர்கள் தொழிலில் ஈடுபடவேண்டுமானால் கடற்றொழில் உபகரணங்கள் தேவை. அவர்களின் தேவையை நிறைவு செய்யும் அளவில் இதுவரை எந்த உபகரணங்களும் முழுமையாக வழங்கப்படவில்லை. கடற்றொழில் என்பது சாதாரணமானதல்ல. ஒவ்வொரு காலத்துக்கும் ஒவ்வொரு வகையான உபகரணங்கள் தேவை. வருடம் முழுவதும் ஒரே வகையான வலையைப் பயன்படுத்த முடியாது. ஒருகாலம் இறாலுக்குரியது. அதன் பின்னானது அறக்கொட்டியான், சூடை, வளிச்சல் என இப்படியே ஒவ்வொரு வகையான மீன்கள் ஒவ்வொரு காலத்துக்கு அதிகமாகவிருக்கும். அத்தனைக்கும் ஒரேவகையான வலைகளைப் பயன்படுத்த முடியாது. என்றுமில்லாத பேரிழப்பைச் சந்தித்த இந்த மக்களிடம் இப்போது எதுவுமே இல்லை. இவர்களின் தொழில் முறை எவையும் பரிபூரணமாக கொடுக்கப்படவில்லை. இந்த நிலையில் அவர்களால் சுனாமிக்கு முன்னர் செய்த தொழிலை நிறைவாக எவ்வாறு இப்போது செய்யமுடியும்.

முல்லைத்தீவில் 1800 இற்கும் அதிகமான படகுகள் மீனவர்களிடம் இருந்தன. ஆனால் இப்போது 800 வரையான படகுகள்தான் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐந்து வலையையும் பத்து வலையையும் வைத்து, பூரணமான தொழில் செய்ய முடியாது. இது முல்லைத்தீவின் நிலை மட்டுமல்ல வடமராட்சி கிழக்கின் நிலையும் தான். மீனவர்களின் தேவைக்கேற்ப அனைத்தையும் ஒரே தடவையில் வழங்க வேண்டும். அப்படி வழங்காதவரை முன்னர் இருந்த தொழில் நிலையை எட்டமுடியாது.

**மீன்பிடி உபகரணங்களைப் பெறுவதில் சிரமம்.**

இது உண்மைதான் இலங்கையின் கரையோரப் பகுதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. தென்னிலங்கையின் கரையோர மக்களுக்கு அதிக உதவிகள் கிடைக்கின்றன. இதனால் உற்பத்தியாகும் வலைகள் மற்றும் உபகரணங்கள் அங்கு வழங்கப்பட்டு எஞ்சியதையே எமது பகுதிகளுக்கு வருகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டே நாங்கள் முல்லைத்தீவில் ஒரு வலை உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவும்படியும் கடலுணவுகளைப் பதப்படுத்தும் வகையில் ஐஸ் தொழிற்சாலையை நிறுவுமாறும் ஆரம்பத்திலேயே கூறியிருந்தோம். அப்படி அமைக்கின்றபொழுது எங்கள் பகுதியின் தேவைகளுக்கு ஏற்ற வலைகளை உற்பத்தி செய்யலாம். அதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாம். ஆனால் அது கைகூட வில்லை.

**முல்லை, வடமராட்சியின் நிலைமை மோசம்.**

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் முதலில் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அதிலிருந்து தற்காலிக குடியிருப்புக்கு அடுத்த கட்டமாக நகர்த்தப்பட்டனர். வெறும் ஆறு மாதங்களுக்கு மாத்திரம் குடியிருப்பதற்காக அமைத்துக் கொடுக்கப்பட்ட குடிசைகளிலேயே ஒரு வருடமாகியும் வாழ்கிறார்கள்.

ஒரு மனிதனின் வாழ்வில் இருப்பிடம் முக்கியமானது. ஆனால் தற்காலிக குடியிருப்புக்களில் வாழ்கின்ற மக்கள் அவல வாழ்வு வாழ்கின்றனர். அண்மையில் பெய்த பெருமழையால் தற்காலிக குடியிருப்புக்களில் வாழ்ந்த மக்கள் அடைந்த துன்பம் கொஞ்சமல்ல. குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கிப் போயிருந்தன. மலசல கூடங்களில் எல்லாம் வெள்ளநீர் நிறைந்து பெரும் சுகாதார நெருக்கடிகளைச் சந்தித்தனர். வடமராட்சி கிழக்கிலும் முல்லைத்தீவிலும் ஒரே நிலைதான். இந்த நிலையில் எப்படி குழந்தைகளுடன் நிம்மதியாக வாழ்வது ஏற்கனவே தாக்கப்பட்டவர்கள் இப்போது மீண்டும் தாக்கப்படுகிறார்கள்.

இது சாதாரண பிரச்சினையல்ல மூன்றாம் கட்ட வேலைத்திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஒருவருடத்தில் நிரந்தர வீடுகள் அமைத்துத் தருவதாகக் கூறப்பட்டது. ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவேயில்லை. உண்மையைச் சொல்வதானால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டவாக்குறுதிகள் எவையுமே நிறைவேற்றப்பட வில்லை. இந்த மக்களின் அவசிய தேவைகளை நிறைவு செய்யப்பின்னடிப்பது கவலைக்குரியது.

**தென்னிலங்கையில் புனரமைப்பு வேலைகள் தீவிரம்.**

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பிரித்துப்பார்க்கிறார்கள். ஆனால் இங்கு இரண்டு கண்ணோட்டத்தையும் ஒன்றாகவே பார்க்கின்றனர். தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் சரி புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் எங்கள் பகுதிகளுக்கு சனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர்தான் முன்னெடுக்கப்படும் என்றார்கள்.

சுனாமியால் மூன்றில் இரண்டு பங்கு அழிவைச் சந்தித்தது வட-கிழக்குத் தாயகம்தான். மூன்றில் ஒருபங்கு அழிவையே தென்னிலங்கை சந்தித்தது. கூடுதலான அழிவைச் சந்தித்த தமிழர் தாயகம் எந்தப் புனரமைப்பும் இல்லாமல் மோசமான நிலையில் இருக்கிறது. ஆனால் குறைந்த அழிவைச் சந்தித்த தென் பகுதி விரைவாக புனரமைப்புச் செய்யப்பட்டு இயல்பு நிலைக்கு மீண்டுகொண்டிருக்கிறது. எங்கள் பகுதிகள் புறந்தள்ளப்படுவது மிக மோசமான செயல்.

**வீதிகள் கூட திருத்தப்படவில்லை.**

சுனாமி அழிவு ஏற்பட்டு ஒருவருடம் கடந்து விட்டது. ஆனாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகள் பாலங்கள் திருத்தப்படவேயில்லை. நாயாறுப்பாலம் முழுமையாக அழிந்து போயுள்ளது. வட்டுவாகல் பாலம் மிக மோசமான நிலையில் உள்ளது. இவற்றை எல்லாம் புனரமைத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்யுமாறு அரச அதிபர் மற்றும் பல்வேறு துறை சார்ந்த பிரதிநிதிகளிடம் எத்தனையோ தடவைகள் எடுத்துக் கூறப்பட்டது. எதுவும் நடக்கவில்லை.

**புலம் பெயர்மக்கள்தான் உதவ வேண்டும்.**

எங்கள் மக்களின் ஊர்கள் சுனாமியால் சுடுகாடாகிப் போயுள்ளன. அதிலிருந்து தப்பியவர்கள் இப்போது இடைத்தங்கல் முகாம்களில் துயரம் நிறைந்த வாழ்வை வாழ்கின்றனர். அரசையும் அதன் பொதுக்கட்டமைப்பையும் நம்பி இருக்க முடியாது.

மக்கள் நிவாரணத்தைப் பெற்று தமது வாழ்வைப் போக்க முடியாது. மக்களின் விருப்பம் தொழில் செய்து வாழ்வதே. ஆனால் அதற்கான ஏதுநிலைகள் இல்லை. இனியும் அரசின் கையையும் நிறுவனங்களையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவேயில்லை. இதனால் புலம்பெயர் மக்கள் முன்வந்து திட்டங்களை நெறிப்படுத்த வேண்டும். அதுதான் எமக்கு இப்போதிருக்கும் வழி.

**தமிழீழக்கடற்படையை வலுப்படுத்துகிறார்கள்.**


கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி இயற்கை அனர்த்தத்தால் தமிழீழக் கடற்படைக்கு பாரிய சேதம் ஏற்பட்டுவிட்டதாகவும் கடற்படைக்கிருந்த மக்கள்பலம் சிதைக்கப்பட்டுவிட்டதாகவும் படைதரப்பும் ஏனையவர்களும் பிரச்சாரம் செய்து வந்தனர்.

ஆனால் உண்மையில் தமிழீழக் கடற்படைக்கு பெரும் இழப்பு ஏற்படவில்லை. கடற்படையின் செயற்பாடுகளுக்கு பின்புலமாக நின்று செயற்பட்ட மக்களுக்குத் தான் பேரிழப்பு ஏற்பட்டது. எங்களின் வெற்றிக்குப் பின்னால் நிற்கிறவர்கள் இந்த மக்கள்தான். அவர்களின் இழப்பு எமக்கு ஒருவகையில் பின்னடைவாக வேதான் இருந்தது.

இப்படியிருக்க இழப்புக்களில் இருந்து அவர்கள் விரைவாக மீண்டு எம்முடன் இறுக்கமாக இணைந்துவிட்டார்கள். தொடர்ந்தும் இழப்புக்களுக்குள் தேம்பியிருக்காது. தாமாகவே முன்வந்து துணைப்படைப் பயிற்சி பெற்று தமிழீழக் கடற்படையைப் பலப்படுத்துகின்றார்கள். வடமராட்சி கிழக்கு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பகுதியைச் சேர்ந்த மக்கள் இதில் கூடுதல் அக்கறை காட்டி சுனாமி எமக்கு ஏற்படுத்திய பின்னடைவை விரைந்து நிறைத்திருக்கிறார்கள்.



# கடல்கொண்ட உறவுகளுக்கு கவிதாஞ்சலி



## மார்கழி 26

மார்கழி 26
வழமைக்கு மாறாய்
ஏன் இப்படி விடிந்தது.?

போர்கூட ஓய்ந்துள்ள

பொழுதொன்றில்..
யார் நினைத்தார் இப்படிப்
பயங்கரம் நிகழுமென்று?

மனித மனங்களின் கோபம்
பார்த்துள்ளோம் தான்.

கடலின் கோபத்தை
யாரேனும் பார்த்ததுண்டோ?

பனையளவு உயரத்திற்கு
ஓங்கி அடிப்பதற்கு
கடலலைக்கு...
ஏன் இப்படி எம்மில்
இத்தனை கோபம்?
என்ன செய்தோம் யாம்.

வெள்ளலை தாலாட்ட
விழி தூங்கினோம்.
வெள்ளிடி விழுமென்று
யார் எண்ணினோம்?

சிறு மணலில் வீடு கட்டியும்
கரை மணலில் "அ"னா எழுதியும்
மகிழ்ந்த மழலைகள் மகிழ்வை
பொறுக்காமற் தானா பொங்கினாய்
பொறாமைக்காரி நீ.
அன்னை என்ற சொல்லிற்கே
அர்த்தம் இழந்தது உன்னால்

வயிற்றுப் பசிக்காகவே
உன்னிடம் வந்தோம்
இரத்தம் புசிக்கவா நீ
இராட்சத வடிவெடுத்தாய்.

மார்கழி 26
மரணக் காடாக்கிய கரிநாள்

எச்சங்களைக் கூட
எடுக்க எவருமற்றுப்போன
பச்சைத் துரோக நாள்.

மார்கழி 26 ஐ
கடைப்பிடிப்போம்
பறிகொடுத்த உறவுகளின்
ஆத்ம தாகத்தோடு.

**வேலணையூர் சுரேஷ்.**

## கடல் எங்கள் செவிலித்தாய்

சமுத்திரம்
எம் நண்பன்,
எம் சந்ததி எல்லாம்
அதன்
தொப்புள்கொடி
உறவுகள்....
பூகோளத்தின் புரட்சி
புவி ஓட்டின் நகர்ச்சி
ஆழிப்பேரலையாய்
கனைக்க வைத்தது
ஆழியில்
எழுந்து, அலையாய்
புரண்டு ஓடுங்கள்...
ஓடுங்கள்...என்று
கூக்குரல் போட்டு
குமுறி வந்தது
அந்தப் பேரலை
யாருக்கு விளங்கும்
அந்த அலை மொழி
அனுபவம் இல்லையே
எமக்கு....

எங்கள்
உடலில் ஓடுவது
குருதிஅல்ல...
அந்த கடலன்னையின்
உப்பு நீர்தான்.
அவ்வளவிற்கு அவள்
எம்முடன் ஐக்கியமானவள்
கடலைக் கண்டிக்காதே
அது கண்ணீர் வடிக்கிறது

எம்மை அரவணைத்த
திரைக்கரம்
துவைத்தது என்று
தூற்றாதே
அது பூகோள மாற்றம்
புரிந்து கொள்
அதற்காக அவருக்கு
கல்லெறிந்து என்னபயன்

மொட்டுக்கள்
உதிர்ந்தன
கிளைகள் ஒடிந்தன.
காய்கள், கனிகள்
கருகியே மறைந்தன
ஏன்.. பல மரங்கள்
பாறியே விழ்ந்தன
என்ன செய்வது...
ஏற்றுக்கொள்ளத்தான்
வேண்டும்.
அன்னையின் மடியில்
புரண்டதை விட
கடலன்னையின் மடியில்
தவழ்ந்ததே அதிகம்
புரிந்துகொள்
அச்சம் கொள்ளாதே.
அவள் உன்
செவிலித்தாய்.


மரணித்தவரின்
சாந்திக்காக எம்
வாழ்வை தொடர்வோம்
என்று தடங்களைப்பதிப்பதற்காக
உறுதி எடுப்போம்
இந்த நாளில்...
காலம்
எம் சோகத்தை
கண்டிப்பாக கரைத்துவிடும்
காலத்திடம் எம்மை
காணிக்கையாக்கிவிடுவோம்...

**மா.பகீரதன்.**

## கந்தகம் சுமந்த கடல்

"டிசம்பர் 26"
மரணத்துள் பிறந்து வாழும் எம்மையே
ஒருமுறை..
மரணங்கள் உலுப்பிய நாள்!

எமதுவாழ்வின் அத்தியாயங்களில்
ஒரு துயர (ப்) பக்கத்தை
கண்ணீருடன்
புதிதாய் தொடங்கினோம் அன்று..!



எமது செவிகள்
எத்திசையிருந்தும்
உ[illegible]காற்றை மட்டுமே
உள்வாங்கிக்கொண்டதும்..
உப்புக்காற்று
ஊதியாய் துளைத்ததும்..
கண்ணீருக்குப்பதிலாக - நம்
கண்களை உதிர்த்ததும்..
எம் உறவுகளின் உடல்களின் மீது
தடுக்கிவிழுந்ததும்
உலகப்பிரளயம்
நடந்தேறிய இ[illegible]தான்

எம் [illegible]ரணங்களின் மீது இயற்கை நடத்திய
கோரத்தாண்டவத்தின் சுவடுகள்
உயிரின் கடைசி அணுவையும்
உலுப்பி ஓய்ந்துபோனது

மன்னிக்க முடியாது அந்த
மரணத்தை எம்மால் இறுதிவரை.

வீரத்தின் சின்னமாய்
மார்பில் குண்டேந்தி
மண்ணணைத்த குலத்திற்கு
ஈனமாய் நடந்த செயல் இது!

எம்கடல் அன்னையே
தத்தித்தாவி உன்மடியேறி
நித்தம் வாழ்ந்திட்ட எம்மை
தாய்மையோடு தொட்டணைத்தவள் நீ...!
வாழ்வின் சிகரங்களில் எம்மை
மெல்ல ... மெல்ல
கைபிடித்தேற்றினாய் - ஏன்
அன்று மட்டும் எம்மை
அனாதைகளாக்கிப் போனாய்?
இத்தனை கோபமேன்
எம்மில் உனக்கு
இருந்தும்
உன்மடிசாய்ந்து அழுவதைவிட
வேறென்ன இயலும் எமக்கு?
நிச்சயமாய்
இனியொருமுறை இதுபோல்
நாம் கண்ணீர் சொரிய நேரின்..
காணாமலே போகும் கடல்..

**த.நிரஞ்சலன்**

## அதற்காக உன் மடியை வெறுப்பதற்கு நாங்களில்லை

ஊழிக் கூத்தாடி
ஊர் அழித்த கடலலையே
ஆழிப்பேரலையாய்
அவலம் தந்த கடலலையே
மீளாத்துயர் தந்த
மிகக் கொடிய கடலலையே
ஓர் ஆண்டு சென்றபின்னும்
எம் துயரம் ஆறவில்லை.
அதற்காக உன் மடியை
வெறுப்பதற்கு நாங்கள் இல்லை.

உந்தன் அலைக்கரங்கள்
ஓங்கி அறைந்ததிலே
எந்தன் தமிழ்தேசம்
ஏங்கியது உணைப்பார்த்து
உன்னோடு உறவாடி
உன்மடியில் சோறுண்டு
நிம்மதியாய் இருந்தோரை
நீ சிதைத்தாய் இது முறையோ?
அதற்காக உன்மடியை
வெறுப்பதற்கு நாங்களில்லை.

உன் இருந்து அலைவந்து
ஊர் அழித்து அவலம்தந்து
பன்னிரெண்டு மாதங்கள்
பறந்தோடி சென்றதின்று
வண்ணத்தமிழ் தேசம்
வாடி வதங்கி நின்று
உன்னை ஒரு கணமே
ஊழியாய் பார்த்ததன்று
அதற்காக உன் மடியை
வெறுப்பதற்கு நாங்களில்லை.

அலைமீதில் படகேறி
வலைவிரித்து மீன் எடுத்து
உலை எரித்து வாழ்ந்தோரை
ஓர் நொடியில் கொன்றொழித்தாய்
விலையில்லா அவ் உயிரை
வீணே அழித்துவிட்டாய்
அதற்காக உன் மடியை
வெறுப்பதற்கு நாங்களில்லை
மறுபடியும் வாழ்ந்தெழுவோம் - உன்
மடிமீதில் தவன்றிடுவோம்.
ஒரு துயரம் தந்ததற்காய்
ஒதுக்கி வெறுத்திடோம் -நீ
துயர்தந்த நாளதனை
வரலாற்றில் பதித்துவிட்டோம்..

**முத்தையனூர் துஸ்யந்தன்.**

## வலிகொண்டு வலிமை சேர்ப்போம்

மெதுவாய் மெதுவாய்- அலைகள்
உட்குவிந்தும் மேலெழுந்தும் -வந்து
கரை தழுவி-மீண்டும்
உள்ளே நழுவிச் செல்கிறது.

கரையேறிய உப்புக் காற்று- உடைந்த போன
கட்டடங்களும் முறிந்த போன
மரங்களினூடும் புகுந்து -தன்
மழலைகளை தேடியலைகிறது.

எத்தனை பெரிய அமைதி அவளுள்
ஏதோ குறும்பில்லா குழந்தைபோல்
பெற்றவைகளையே தின்கின்ற தாய்போல- நீ
தின்றதுகளை யார்தான் மறப்பார்?

நீ கொண்டு போனவைகளை கரைசேர்ப்பாய் என்று
நாம் எத்தனை நாள் காத்திருந்தோம்
அத்தனையும் பொய்யாக்கிப் போனாயே!
ஆனாலும் உனக்கு நன்றி.

சுனாமியே!
"உன்னால் நாங்கள்
உலகத்தின் உருண்டைக்குள் உள்ள
உடைசல்களையெல்லாம் கண்டுகொண்டோம்"

"உறவென நாம் நம்பிய கரங்கள்- இனியும்
உதவாது எனக் கண்டுகொண்டோம்"-எங்கள்
உயிர் ஊசலாடும் வேளையில்- எமக்கு
உதவக்கூட இணைந்து கொள்ளா
அரசாங்கத்தைப் புரிந்து கொண்டோம்.

எல்லாமே கைவிரித்த நிலையில்
எல்லாமே பொய்த்துப்போன நிலையில்
எங்கள் வானத்துச் சூரியன்
எமக்கு ஒளி தந்தான்.

வலி கொண்டு
வலிமை சேர்ப்போம்.
வல்லை மைந்தன் தந்த வேத
வாக்கு.

நாங்கள் ஒன்று சேர்ந்தோம்
நாங்களே முயன்றோம்.
நாங்களே போராடினோம்- மீண்டும்
நகரங்களை சுவர்க்கமாக்கினோம்.

உலகமே வியந்தது
உண்மையைப் புரிந்தது
உணர்ந்தெழுந்த தமிழினத்தை
உடைக்கமுடியாதென்றிந்தது.

இன்றோடு எம் மண்ணில்
சுனாமிக்கு வயதொன்று
இடிந்துபோனவைகளும்
அழிந்துபோனவைகளும்
சுத்தமாக்கப்படாத எச்சங்களும் சாட்சி.

உடைந்து போன
கட்டடங்களைக் கட்டுவோம்



கட்டுமானங்களைக் கட்டுவோம்
[illegible]வது எங்ஙனம்?-நாங்கள்
[illegible]ம் கட்டலாம்.
[illegible]க்குள் சிக்கி
[illegible] ஒவ்வொரு தமிழனும்
அழிந்து போய் எஞ்சிய
[illegible]யார்களுக்கு
[illegible]விதிகளுக்கு
[illegible] சொத்துக்களுக்கு
[illegible] தவிருங்கள்
எதிர்கால வாழ்விற்கு படிகொடுங்கள்
[illegible]வாய் அணைத்திடுங்கள்

[illegible]ன்று அவர்களின்
வாழ்வைக் கட்டியெழுப்புவோம்
நாளை
நாம் எல்லோரும் சேர்ந்து எம்
நாட்டைக் கட்டியெழுப்புவோம்!

**-வி.வாகையபன்.**




# 15.12.2005
# 21.12.2005

**15.**

☐ ஹொங்கொங்கில் நடந்த உலக வர்த்தக மாநாட்டுக்கு எதிர்ப்புத்தெரிவித்து விக்டோரியா பூங்காவிலிருந்து மாநாடு நடக்கும் மையத்துக்கு தென்கொரிய எதிர்ப்பாளர்கள் பேரணி நடத்தினர்.



☐ சீனாவின் ஷியோ யுவான் நகரிலுள்ள நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 38 நோயாளிகள் பலி 50 பேர் காயம்.

☐ ரஷ்ய அணுமின் நிலையத்தில் தாதுப் பொருளை உருக்கும் உலையில் திடீர் வெடி விபத்து ஏற்பட்டத்தில் மூன்று பேருக்கு பெரும் தீக் காயங்கள் ஏற்பட்டன.

☐ ஈராக்கில் பொதுத்தேர்தல் இடம் பெற்றது. இதன்போது பல இடங்களிலும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

**16.**

☐ நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் ஆலயத் திருவிழா ஒன்றின் போது இராணுவச் சிப்பாய் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் பலியான சம்பவத்தைக் கண்டித்து பொது வேலை நிறுத்தம். ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

☐ இந்திய பாராளுமன்ற அங்கத்தவர்கள் பாதுகாப்புக் காரணங்களின் அடிப்படையில் பாராளுமன்ற கட்டடத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

☐ கொலம்பியாவின் வடபகுதியில் கெரில்லாக்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து பொலிசார் பலி.

**18.**

☐ தமிழகம் சென்னையில் நிவாரணம் பெற ஒன்று கூடிய மக்களிடையே ஏற்பட்ட திடீர் நெரிசலில் சிக்கி 43 பொது மக்கள் பலி. பலர் காயம்.



**19.**

☐ முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முதலாக ஆப்கானிஸ்தான் பாராளுமன்றம் கூடியது.



☐ ஈராக்கில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலின் போது மூன்று பேர் பலி, பலர் காயம்.

**20**

☐ லண்டனில் கடந்த யூலை மாதம் ஏற்பட்ட தொடர் குண்டு வெடிப்பில் தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேக நபர் லண்டனில் கைது.

☐காஷ்மீர் தலைநகர் முஷபராபாத் அருகிலுள்ள சினாரிப் பகுதியில் பேருந்து ஒன்று ஆற்றினுள் விழுந்ததில் 25 பேர் பலி.

☐அமெரிக்காவின் "ஓசன் ஏயார் வெஸ்" என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான விமானம் அமெரிக்காவின் மியாமிக் கடற்கரைப் பகுதியில் விழுந்து நொருங்கியதில் 20 பேர் பலி.

**21.**

☐ இந்தோனேஷியாவின் சுலோவேசித் தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 6.3 புள்ளியாகப் பதிவானது.

☐ ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான அல்ஜீரியாவில் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் பத்துப் பேர் உடல் நசுங்கிப் பலி; 25 பேர் காயம்.

☐ மலேசியாவின் வடக்கில் கடும் மழையாலும், வெள்ளப்பெருக்காலும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இடம்பெயர்வு ஆறு பேர் பலி.

# நாட்டுப்பற்றாளர் நவரட்ணத்தின் படுகொலைக்கு துணுக்காய் தே.எ பேரவையினர் கண்டனம்

## -தொடர்ந்து பொறுமை காக்க மாட்டோமென்றும் எச்சரிக்கை

(மல்லாவி)

நாட்டுப்பற்றாளர் சின்னத்தம்பி கிருஸ்ணர் நவரட்ணம் நயவஞ்சகமான முறையில் அரச கூலிப்படைகளின் அரச புலனாய்வுப் பிரிவாலும் ஒட்டுக்குழுக்களாலும் சுட்டுக்கொலை செய்யப்பட்டமையை துணுக்காய் தேசிய எழுச்சிப் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது..

இது குறித்து அது வெளியிட்டுள்ள அறிக்கையில்; தமிழர் தேசம் மீதும், தமிழ் மக்கள் மீதும், மிக அன்பு கொண்டமைக்கு அரச படைகளின் பரிசாக நெஞ்சிலே குண்டுகளை ஏந்திக் கொண்டார். தமிழர் அழிக்கப்படுவதையும் தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளையும் புதைகுழியில் புதைப்பதையும் மாணவர்களு், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் என்னும் எமது மக்களின் உயிர்களைப் பறித்த கோரச் செயல்களை எப்படி அழைப்பது? தற்காப்பிற்கு ஒரு தமிழ் மகன் கல்லெடுத்து எறிந்து விட்டால் தடி எடுத்து அடித்து விட்டால் அது அரச யுத்தநிறுத்த மீறலாகின்றது. அரச கூலிப்படைகளின் வன்முறைகள் அடாவடித்தனங்கள் கோரத்தனமாக மாறுகின்ற போது பொறுமை இழந்த மக்கள் பொங்கி எழுந்து மக்கள் படையாக மாற்றம் பெறுகின்றார்கள். பகுத்தறிவு பெற்ற மனிதன் கொடுமைகளை இனங்கண்டு கொதித்தெழுந்து கொடுமைகளுக்கு எதிராகப் போராடப் புறப்படுகின்றான். இது பகுத்தறிவு படைத்த மானிடனின் இயல்பான குணமாகும். இதை அடக்கி ஒடுக்கி அடிமையாக்கி விலங்கிட நினைப்பது சிங்கள இனவாத கூலிப்படைகளின் கையாலாகாத தனத்தையே காட்டி நிற்கின்றது.

தொடர்ச்சியாக தமிழ்மக்கள் இப்படியான கொடுமைகளை எதிர்கொள்ளத் தயாராகாது பொறுமையாக இருந்து பல சம்பவங்கள் ஊடாக நிரூபித்துள்ளார்கள். தொடர்ந்தும் எம் மக்கள் கைகட்டி, வாய் பொத்தி சொல்வதற்கு தலையாட்டும் பொம்மைகளாக நிற்பார்கள் எனச் சிங்கள இனவாதக் கூலிப்படைகளும் ஒட்டுக்குழுக்களும் எதிர்பார்ப்பது மிகுந்த ஏமாற்றத்தையே தரும் என்பதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஆர்ப்பரித்து எழும் மக்களை எந்த வல்லாதிக்கமும் அடக்கி ஒடுக்கி விட முடியாதுஎன்ற வரலாற்றை எதிரி விரைவில் எம் மக்களிடமிருந்து பெரியபாடமாகக் பெற்றுக் கொள்வான். இனவாத கும்பல்களால் படு கொலை செய்யப்பட்ட நாட்டுப்பாற்றாளர் நவரட்ணம் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(24)

# பேசாலை சம்பவம் குறித்து மகிந்தவுக்கு ரணில் ஆலோசனை

பேசாலையில் சிறிலங்காக் கடற்படையினர் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாக எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சிறிலங்கா சனாதிபதி மகிந்தராஜபக்ஷ தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த உரையாடல் 20 நிமிடநேரம் நீடித்துள்ளது.

நாட்டில் தேவையற்ற பதற்றம் ஏற்படாமலிருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் மகிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

சம்பவத்தில் உயிரிழந்த கடற்படையினரின் உடல்களை எடுத்துச்செல்லும் கிராமப் பகுதிகளுக்கான பாதுகாப்பை பலப்படுத்துமாறும் அந்தப் பிரதேசங்களில் பதற்றமான சூழ்நிலை ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் நடவடிக்கைகளை எடுக்குமாறும், மகிந்தவுக்கு ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். தற்போதைய நிலைமை தொடர்பில் எடுக்கப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் தேவையான அனைத்து உதவிகளையும் தான் வழங்குவதாகவும் ரணில் உறுதியளித்ததாக ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# புலிகளுக்கு எதிரான கூட்டணி தமிழ்க் குழுக்கள் முயற்சி

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழ் அரசியல் கூட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான முயற்சியில் தமிழ்க் குழுக்கள் கவனம் செலுத்துவதாக கொழும்பில் வெளியாகும், ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இந்திய அரசாங்கத்தின் வழிகாட்டல் மற்றும் யோசனைகளுக்கமைய புதிய அரசியல் கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி ஈடுபட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி, புளொட், ஈ..பி, ஆர்.எல் எப்.(வரதர் அணி) தமிழர்விடுதலைக் கூட்டணி ஆகிய குழுக்கள் இணைந்து இந்தக் கூட்டணி ஏற்படுத்தவுள்ளன.

எதிர்வரும் தேர்தலில் ஒன்றாகப் போட்டியிடுவது மற்றும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக சர்வதேச அபிப்பிராயத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியன இந்தக் கூட்டணியின் வேலையாக இருக்கும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான முஸ்லிம் அரசியல் கட்சிகளையும், இந்தக் கூட்டமைப்பில் சேர்த்துக்கொள்வது தொடர்பாக இந்தக் கட்சிகள் கவனம் செலுத்துகின்றன.

அண்மையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் நான்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்ளவுள்ளதாக அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்திருந்தார்.

அந்தக் கூட்டணி உருவானால் ஏற்படக்கூடிய அரசியல் நிலைமைகளுக்கு முகம் கொடுக்கும் நோக்கில் இந்தப்புதிய கூட்டமைப்பு ஏற்படுத்த உள்ளதாக புதிய கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளதாக அந்த ஊடகத்தின் செய்தி தெரிவிக்கின்றது.

# உள்ளூராட்சி தேர்தல் நடத்த குழு நியமனம்

சிறிலங்காவின் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசாங்கத்தின் குழுவை சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

அமைச்சர்களான டியூ குணசேகர, தினேஸ் குணவர்த்தன மற்றும் ஜானக பண்டார தென்னக்கோன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

தொகுதி அடிப்படையிலும், விகிதாசார முறைப்படியும் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவை யான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்தக் குழுவினர் இந்தவாரம் உள்ளாட்சிமன்ற அமைச்சில் சந்திக்கவுள்ளனர். இந்த சந்திப்புக்குப் பின்னர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவையும் இக்குழு சந்தித்து உரையாடவுள்ளது.

# தனியார் மருத்துவசேவை நிலையங்களில் தமிழீழ சுகாதார சேவைகளின் மருத்துவ உரிமம்

தாயகப் பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து தனியார் மருத்துவச் செயற்பாட்டு நிலையங்களும், தமிழீழ சுகாதார சேவைகளின் 2006 ஆம்ஆண்டு மருத்துவ உரிமத்திற்கு சுகாதார சேவைகளின் கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் (கறுக்காய் குளம்) வவுனியா, (புளியங்குளம்) மாவட்ட அலுவலகங்களில் விண்ணப்பித்துக்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர். விண்ணப்பிக்கும் நிலையங்களாக கேட்டு தனியார் ஆங்கில மருத்துவ சிகிச்சை நிலையங்கள், ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள், சுதேச ஹோமியோபதி, அங்கு பங்சர் யுனானி மருத்துவ சிகிச்சை நிலையங்கள் ஆங்கில மருத்துவ ஆலோசனை நிலையங்கள் சுதே மருத்துவ ஆலோசனை நிலையங்கள், விஷகடி முறிவு, நெரிவு சிகிச்சை நிலையங்கள், பற் சிகிச்சை, கண் சிகிச்சை, விசேட மருத்து சிகிச்சை, மருத்துவ ஆய்வு கூடங்கள், பல் கட்டுமிடம், கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குமிடம் சுதேச மருந்து விற்புனை நிலையங்கள், நடமாடும் ஆங்கில சுதேச மருத்து விற்பனைகள் சுதேச மருந்து தயாரிப்பு நிலையங்கள், ஆங்கில மருந்து தயாரிப்பு நிலையங்கள், மருந்து விற்பனை முகவர்கள் ஆகியன உட்பட்ட அனைத்து தனியார் மருத்துவ செயற்பாட்டு நிலையங்களும், மருத்துவ உரிமத்திற்கு சனவரி முதலாம் திகதியிருந்து சனவரி 31ஆம் திகதி விண்ணப்பித்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# சனாதிபதி மாளிகைக்கு குடிபுக மகிந்த முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் முதலாம் நாள் முதல் சனாதிபதி மாளிகைக்கு மகிந்த ராஜபக்ஷ குடிபெயர்கிறார். என்று மகிந்தவின் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதி சந்திரிகா வெளியேறியதையடுத்து அங்கு செல்ல மகிந்த ஏற்பாடுகளை மேற்கொள்கின்றார். சனாதிபதி மாளிகை தற்போது புதுப் பிக்கப்பட்டு வருவதாகவும், முதலாம் நாளுடன் புதுப்பித்தல் நடவடிக்கைகள் பூர்த்தியடையும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்தக் தகவல்கள் தெரிவித்தன.

புதிய மாளிகையில் குடியேறுவதற்கு முன்னர் அங்கு மத வைபவங்கள் நடத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# வீதிகளில் மணல் ஏறியுள்ளமையால் போக்குவரவுச் சிரமம்

(புதுக்குடியிருப்பு)

கடந்த மாதம் பெய்த கனமழை காரணமாக, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் போக்குவரவு செய்ய முடியாத அளவுக்கு சேதமாகிய சிறு வீதிகள் பல இன்றுவரையும் தற்காலிக மாகக்கூட சீர் செய்யாமல் உள்ளமையால் மக்கள் போக்குவரவு செய்வதில் பெரும் இடர்களை எதிர் கொண்டுள்ளனர்.

மேலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதான வீதியின் மேல் பல இடங் களில் வெள்ளம் பாய்ந்து மணல் ஏறியுள்ளது. அந்த மணலை இது வரையும் அகற்றவில்லை. இதனால் போக்குவரவு செய்வதில் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ள துடன், வீதி விபத்துக்களும் ஏற்பட நிறைய சந்தர்ப்பம் உள்ளது. (08)

## ஓராண்டு நினைவு நாள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1952 | 2004 |
| 07 | 12 |
| 02 | 26 |

### அமரர் ஜேம்ஸ் மரியதாஸ்

உண்ணாப்புலவு, முல்லைத்தீவு

மரியாளே! எங்கள் மாதாவே!
முதலிரவு உமக்கு பாலன் பிறந்தார்
எங்கள் முற்றங்களிலோ மரணம் பிறந்தது
கரையேறி வந்த கடல் எங்களுயிர் தந்தையும் குடித்தது
மரியாளே! எங்கள் மாதாவே!

தகவல்:
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
சூட்டி குடும்பத்தினர்

முகவரி:
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

(7181)

## முதலாம் ஆண்டு நினைவு



கு. சுலைதி.ந. அஷனவதி.ந. சிவமனோகரி.ந. சோவனா
ந.கேசிங்.ந. நாதராகன்.ந. புவிசயன்

இவர்களின் ஓராம் ஆண்டு ஆத்மா சந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், பாடசாலை மாணவர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்.
அன்பு அண்ணனும், ஆசை மாமனும்,
சிவதாஸ் (தாசன் குடும்பத்தினர்)

வத்திராயன் வடக்கு
வடமராட்சி.

(7161)

## உம் நினைவில் ஓராண்டு!

### அடைக்கலநாதர் ஜெயப்பிரதா



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 1991–11–20 | 2004–12–26 |

கண்ணே எம் கண்மணியே
உன் சிரிப்பும் உன் செயலும்
எம்மை வாட்டி வதைக்குதம்மா
நீ எப்போதம்மா மீண்டும்
எம்மிடம் வரப் போறாய்.

குடும்பத்தினர்,
உற்றார், உறவுகள்.

(சி-13588)

## உங்கள் நினைவில் ஓராண்டு!



நி. நிசாந்தினி
பிறப்பு: 1977–10–24

கூற்றுவனாய் வந்த
கொடுமலையில் உயிர் பிரிந்து
நேற்றுப் போல் ஆனதம்மா – உமை
நீங்கிய ஓர் ஆண்டு
நினைக்கின்றோம் நெஞ்சுகனக்க.

இவரின் பிரிவால் துயருறும்
கணவன்,
அப்பா, அம்மா,
அன்புச்சகோதரங்கள்.



நி. சுஜீனா
பிறப்பு: 2002–01–07

(சி-13522)

## ஆழிப்பேரலையின் 1ஆம் ஆண்டு நினைவு



### பே.சுஜீத்
### பே. சுஜிதா

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1995–09–30 | 2004–12–26 |
| 2000–04–02 | 2004–12–26 |

ஐயிரண்டு திங்களில் அவனியிலே அவதரித்து
கையிரண்டில் தவழ்ந்த அன்புச் செல்வங்களே
துள்ளும் கன்றுகள் போல் நீங்கள் பள்ளியால் வரும்போது
அள்ளியணைத்திடும் எம் கரங்கள் ஏங்கித்துடிக்குதையா

பிஞ்சு வயதினிலே நீங்கள் வாழ்ந்தது போதும் என்று
வஞ்சகக் குணம் கொண்ட கடல் அன்னை அணைத்தாளோ
ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தால்
ஊழிநாடகத்தில் உறங்கிப் போனீர்களோ.

தகவல்: செ. பேதுறுப்பிள்ளை,
பே. சுசிலாதேவி
குடும்பத்தினர்.

வத்திராயன் வடக்கு,
தாளையடி.

(7159)

## முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வில்...



மோகனலதா இராசகுமார்
01–08–1992



மகேஸ்வரி ரஞ்சன்
08–10–1991



தர்மராஜா ஜெயந்தினி
1997–05–28



அருளானந்தம் மேரி அனுசியா
13–06–1990



சின்னராசா சுபேந்தினி
18–06–1996

ஆழிப் பேரலை மூசி எழுந்து
எம்மண்ணை முத்தமிட்டவேளை
அலையோடு அலையாக அள்ளுண்டு
போனவரே– சென்றது உங்கள் உடல்களே
நினைவுகள் என்றும் எம்முடனே.

என்றும் உங்கள் நினைவுடன்

சிறார்கள், இயக்குநர்,
பணியாளர்கள்,
பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லம்,
வள்ளிபுனம்.

(7175)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### சபேஸ் தீபா (விஜயமலர்)

முல்லைத்தீவு.

| அன்னை மடியில் | கடலன்னை மடியில் |
|---|---|
| 02-02-1981 | 26-12-2004 |

இவருடன் 26-12-2004 அன்று இவ் உலகை விட்டுச் சென்ற அம்மாவான இராஜேஸ்வரி, அத்தான் யோகன், பெறாமகன் சங்கீத் ஏனைய அனைவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றேன்.

### என் இதயப் பிரியமானவளே

என் உள்ளத்தில் இடம்பிடித்து நிஜங்களை நிழல்கள் ஆக்கி என்னை விட்டுச் சென்று ஓராண்டு ஓடிமறைந்துவிட்டது தீபா. உன்னைக்காணமாட்டேன் எனத்தெரிந்தும் மனம் அமைதி கொள்ள மறுக்கின்றது. தீபா உனக்கு மட்டும் தான் நான் சொந்தம். உன்னை நினைக்கும் பொழுதெல்லாம் கண்களில் நீர் வடிய கல்லறை நோக்கி நடக்கின்றேன். அங்கென்றாலும் உன் அழகிய முகத்தைப் பார்த்துப் பேசுவேன் என்று. உன்னைப் பிரிந்து என்னால் வாழமுடியவில்லை. தினமும் நீவரமாட்டாயா எனக் கல்லறையில் கண்ணீர்ப் பூக்களுடன் காத்திருக்கின்றேன். தீபா வாழ்வில் சந்திக்க முடியாத சமாந்தரக் கோடுகள் போன்றதா எம்வாழ்வும். காலமெல்லாம் நீ என்னுடனே வாழ்வாய் என எண்ணினேன். ஆனால், தற்போது தனிமரமாகத் தவிக்கின்றேன். தீபா உன்னுடைய பார்வை, உன் சிரிப்பு நித்தமும் என் இதயத்தில் தோன்றி மறைகின்றது. என்னுயிரே உன் உடல் மட்டும் தான் கல்லறையில். ஆனால், உயிர் உணர்வுகள் எல்லாம் என்னுடனே. தீபா ஓராண்டு அல்ல நூறாண்டு சென்றாலும் உன் நினைவுகளைச் சுமந்தபடி ஆறாத்துயருடன் உனக்காகவே வாழ்ந்து கொண்டிருப்பேன். தீபா உன் மீளாத்துயில் சுனாமிப்பேரலையில் என்றா எழுதப்பட்டது.

என்றும்
உனக்காக ஈரவிழிகளுடன்
வே. சபேஸ் (சசிகரன்)

(6447)

## நீங்காத நினைவில் ஓராண்டு!

பரவிய கடலலையில்
உயிர் பிரிந்த எம் உறவே
பன்னிரெண்டு மாதங்கள்
பறந்தோடிச் சென்றாலும்
உம் இனிய நினைவுகளை
உளமுருகி சுமக்கின்றோம்



### செல்வி. மேரிறொக்சி

| அன்னைமடியில்: | ஆழியின் மடியில்: |
|---|---|
| 09-02-1987 | 26-12-2004 |

என்றும் உம் நினைவுடன்,
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

(சி-13523)

## 1ஆம் ஆண்டு நினைவு நாள்



சுனாமி மடியில் 26 12 2004



### அரவிந்தன் அசோதா

(கிளி. றோயல் முன்பள்ளி மாணவி)
தாய் மடியில் : 20-11-2001

### முத்துச்சாமி சின்னப்பிள்ளை

தாய் மடியில் : 18-08-1937

ஆழிப் பேரலை வந்து அழித்ததோ - என்
பெற்ற வயிறு துடிக்கின்றதோ
எங்கே என் செல்வத்தை எப்போது
காண்பேனோ என் தெய்வமே.

சொந்த முகவரி:
உடுத்துறை வடக்கு,
தாளையடி.

துயரில் துன்புறும்,
தாய் சோதிலட்சுமி (குட்டி)

(6446)

## நீங்காத நினைவுகளில் நிறைவுற்ற ஓராண்டு

26.12. 2004



26.12. 2005

**நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்த அந்தக் கொரூர நாட்களை நினைவு கூருகின்றோம். இன்றயநாளில் கர்த்தரின் மடியில் நீங்கள் அமைதியடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.**

நிர்வாகசபையினர், பணியாளர்கள்,
வெண்புறா நிறுவனம் வன்னி, யாழ்ப்பாணம்,
திருகோணமலை, மட்டக்களப்பு.


(சி-13620)

# முதலாம் ஆண்டு நினைவில் நாம்..

தாயின் மடியில் 01 - 11 - 1968



அலையின் பிடியில் 26 - 12 - 2004



தாயின் மடியில் 10 - 04 - 1997

திருமதி. ஜெயஸ்ரீ சிவஜெயந்தன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
கச்சேரி, முல்லைத்தீவு.

செல்வன். சிவஜெயந்தன் அபிஷேகன்
றோமன் கத்தோலிக்கப்பாடசாலை,
முல்லைத்தீவு.

காற்றினிலே உங்கள் குரல் என் காதோரம்
கடல் அலையில் உங்கள் திருமுகம் தேடுகின்றேன்.
சுனாமி என்னும் கோர அரக்கன் எம்மைபிரித்ததோ
சந்தோசமாக வாழ்ந்த எங்களை கடலலை பிரித்தது
மகனையும் கூட அழைத்து சென்றாயோ
மகளையும் என்னையும் தனியே தவிக்கவிட்டுச்சென்றாயோ!
ஒருமுறை எங்களிடம் பேசமாட்டீர்களோ!

என்றும் உன் நினைவுடன் :கணவன் சிவஜெயந்தன்,மகள்

(7105)

---

26.12 2004

# ஓராண்டு நினைவஞ்சலி

26.12 2005

## சுனாமி பேரலையில் எமது உறவுகள்



சுனாமிப் பேரலை வந்து சுருட்டிச் சென்ற எமது உறவுகள் அத்தனை பேரையும் இன்றைய நாளில்
நினைவு கூர்ந்து கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்.
இவர்களின் நினைவாக இன்று முல்லைத்தீவில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனைகளிலும்அதனைத்தொடர்ந்து வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள
மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் போராளிகள் நண்பர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நேரம்-12.30

-வீரன் குடும்பத்தினர் முல்லைத்தீவு-

(சி-13615)

# முதலாம் ஆண்டு நினைவினில் நாம்

தாயின் மடியில்
18
03
1967



அலையின்கோரப் பிடியில்
26
12
2004

## ரவீந்திரநாதன்-ஸ்ரெலாமேரி
## வண்ணாங்குளம்
## முல்லைத்தீவு

கருத்தொருமித்து இருவரும் மகிழ்வுடன்
வாழ்ந்தோம்
கள்ளமில்லாப் பிள்ளைகளுடன் களிப்புடன்
வாழ்ந்த எம்மை
சுனாமி என்னும் கடலரக்கன் எம்மை
பிரித்ததுவோ
சொல்லாமல் கொள்ளாமல் எங்கு சென்றாய்
தேடுகின்றோம் பிள்ளைகளும் நானும் கடலலையின்
மத்தியில் வருவாயா.......

என்றும் உன் நினைவுடன்
கணவன் ரவீந்திரன்
பிள்ளைகளான:- ர.அபிலாஷா,
ர. ஜெனிபர்,
ர. சோபிதன்
உறவினர்கள் ஆகியோர்.

---

# சுனாமியின் கோரப்பசியின்
# முதலாம் ஆண்டு நினைவினில்

அன்னை மடியில்
31
05
1970



அன்னை மடியில்
25
11
2001

அலையின் கோரப்பிடியில்
26.12.2004

## பாலசுப்பிரமணியம்–ரவீந்திரன்
## ரவீந்திரன்–திபானி
## கள்ளப்பாடு
## முல்லைத்தீவு

உள்ளங்கள் ஒன்றாக சங்கமித்து
ஊர் கூடி ஒன்றாக வாழ்ந்த எம் தெய்வங்களே
மனைவி கதறித் துடிக்க உறவினர் துடிக்க
மகளையும் அழைத்துகொண்டு எங்கையா
சென்றாய்
கடலின் கோரச்சுனாமிக்கு இரையானீரே
தேடுகின்றோம் அலைகளின் மத்தியில்

கள்ளப்பாடு,
முல்லைத்தீவு

என்றும் உங்களுடன்
உறவாடத் துடிக்கும்
மாமி,பேத்தி, க. சிலோன்மணி,
மைத்துனன்சிவானந்தம்,
குடும்பம், சகலன் சந்திரகுமார்
குடும்பம்

(7101)

## முதலாம் ஆண்டு நினைவினில்

அன்னை மடியில் 14-01-2000 அன்னை மடியில் 27-10-2002



சுனாமியின் அலையில்
26 - 12 - 2004



சூரியநாதன் றஞ்சிதா சூரியநாதன் சசிகரன்

கள்ளப்பாடு,முல்லைத்தீவு.

ஒரு கொடியினில் பூத்த
மலர்கள் சுனாமியின்
கோரப்பிடியில்
சென்றீர்களோ!
ஆண்டு ஒன்று ஆனாலும்
தேடுகின்றோம்
கடல் அலையில்
உங்கள் முகங்களை

என்றும் உங்கள்
நினைவுடன்
குடும்பத்தினர்.

கள்ளப்பாடு,
முல்லைத்தீவு. (சி-13590)

## முதலாம் ஆண்டு நினைவினில் நாம்.

அன்னை மடியில் 28 - 03 - 2004



சுனாமியின் கோரப்பிடியில் 26 - 12 - 2004

### இராசரத்தினம்-சகிதன்

குமுழமுனை, முல்லைத்தீவு.

பாசமான எம் அன்புச்செல்வமே-சகிதா
பாரெல்லாம் புகழ்பரப்பி எம்முடன்
வாழ்வாய் என நினைத்தோம்.
பிறந்து ஆண்டொன்று ஆவதற்குள்
சுனாமி என்னும் கோர அரக்கன்
காவு கொண்டதோ!
அலையில் தேடுகின்றோம்
ஒருமுறை வாறாயோ!

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

(சி-13589)

## முதலாம் ஆண்டு நினைவினில் நாம்...

அன்னை மடியில் 24 - 03 - 1956



சுனாமியின் பிடியில் 26 - 12 - 2004

நாட்டுப்பற்றாளர்
அன்னலிங்கம் -சொர்ணலிங்கம்
வட்டுவாகல், முல்லைத்தீவு.

மக்கள் நலனே தனது
சேவையாகக்கொண்டு
மனமகிழ்வுடன் வட்டுவாகலில்
வலம் வந்த சொர்ணலிங்கமே!
சுனாமி என்னும் கோர அலை
உம்மைக்காவு கொண்டதே!
மீண்டும் எழுந்து வாருங்கள்!
தமிழீழமதில் வாழ்ந்திடவே!

என்றும் உங்கள் நினைவுடன்
சகோதரர்கள்.

(சி-13587)

## நெஞ்சைவிட்டகலாத முதலாம் ஆண்டு நினைவலைகள்

கடலின் மடியில்-26-12-2004



06-09-1971 24-10-2000 30-02-1994

அ. வரதலட்சுமி அ. பிரிந்தன் அ. சோபிகா

வண்ணாங்குளம், முல்லைத்தீவு.

எமைக்காத்த கடலே!
எமைக்காத்த அலையே!
நொடிநேரத்தில் எமதுறவை
சுனாமி என்னும் உருவில்
கொண்டு சென்றாயோ!
ஆண்டு ஒன்று போனாலும்
அலைகளில் தேடுகிறோம்
உங்களின் முகங்களை....

குடும்பத்தினர்,
இல:52, ஆனந்தபுரம்,
புதுக்குடியிருப்பு.

(சி-13613)

# திசையெல்லாம் வென்றவர்களின் முதலாம் ஆண்டு நினைவலைகள்



கடற்கரும்புலி மேஜர் தர்மேந்திரா
கனகசபை சின்னப்பொடி
முனைக்காடு, கொக்கட்டிச்சோலை
பிறப்பு-06-06-1979



கடற்புலி வீரவேங்கை கடலறிவன்
திருநாவுக்கரசு யோகானந்தன்
சாரதா வீதி, சங்கானை-யாழ்
பிறப்பு-24-12-1984



கடற்கரும்புலி மேஜர் எழிலரசன்
நாகேந்திரன் அமுதன்
மூதூர், திருமலை.
பிறப்பு-21-01-1980



கடற்புலிகளின் துணைப்படை
கப்டன் மகாலிங்கம்
(பெற்றோல் ஐயா)
இராஜப்பன் மகாலிங்கம்
ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.



## 26-12-2004



கடற்புலிகளின் துணைப்படை
2ஆம்லெப் சாள்ஸ்
ஜெயானந்தன் அன்ரனி சாள்ஸ்
செல்வபுரம், முல்லைத்தீவு.

ஆர்ப்பரித்தெழும் கடலலையில்
ஆடிப்பாடி விளையாடிய வேங்கைகளே!
ஈழமது விடிந்திட அயராது உழைத்தீர்கள்
தானைத்தலைவன் பிள்ளைகள் உங்களை
கடல்த்தாயவள் அணைத்துக்கொண்டாளோ!
சுனாமி என்னும் கொடிய அலை
இலட்சிய நெருப்புக்களை அள்ளிச்சென்றதோ!
எதிரியை அனலாக எரிக்க நினைத்த உங்களை
சொல்லாமல் தன்னுடன்
அணைத்துக்கொண்டாள் என்றாலும்
உங்கள் இலட்சியம் என்றும் அழியாது
உமது நினைவுடன் இறுதி இலட்சியம் வரை-எமது
கால்கள் பயணிக்கும் தமிழீழம் மலரும்
நாள் வெகுதூரமில்லை...

கடற்புலிகளின் அரசியல்துறை,
முல்லைமாவட்டம்.



# ஓராண்டு நினைவாக

## நாகலிங்கம் ஆரோக்கியமேரி

கள்ளப்பாடு, முல்லைத்தீவு.

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 23-08-1958 | 26-12-2004 |

**அன்புக்கு உறைவிடமானவளே! அதிகாரத்திற்கு வன்முறையானவளே! எல்லோர் மனதினிலும் இடம் பிடித்திட்ட அன்புத் தாயானவளே! குருவிக்கூட்டம் போல இருந்த உன் குடும்பம், நீ இல்லாது சோகக்கதையானதுவோ?**

(நீ) சுனாமிப் பேரலையினால் ஆண்டவனடி சேர்ந்து ஓராண்டாகிவிட்டாலும், கோடி ஆண்டுகள் சென்று மறைந்தாலும் எம் இதயங்களை விட்டு உன் நினைவு என்றும் அகலாதம்மா... நீ மீண்டும் திரும்பி வருவீரென நாமெல்லோரும் ஈரவிழிகளுடன் காத்திருக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்

**கணவன் சி. நாகலிங்கம், மகன்மாரான:-நீதன், அரவிந்தன், மயூரன், நிஸ்ரன், மருமகள் மதி, பேரப்பிள்ளைகள், கிருஷி, யதுமி இவர்களுடன் உன் அன்புத்தாய், தங்கைமார், தம்பிமார், மச்சாள்மார், மச்சான்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.**

(7108)

---

# 1ஆம் ஆண்டு நினைவில்



## திரு. ச. மகேந்திரராசா

காவலாளி
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
முல்லைத்தீவு.

**கூடி இருந்த உறவொன்று
கூடு விட்டு பிரிந்து ஆண்டு ஒன்று
அன்று கதைத்திருந்த கதைகளும் தான்
கனவுபோல இருக்குது இன்று
உனதான்மா சாந்திபெற
உத்தமனை வேண்டுகிறோம்.**

26-12-2004 அன்று ஆழிப்பேரலையால் உயிரிழந்த உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

பிரதம பொறியியலாளர்,
நிறைவேற்றுப் பொறியியலாளர்,
உத்தியோகத்தர்கள்,
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
முல்லைத்தீவு. (மாங்குளம்)

(7173)

---

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி சுந்தரலிங்கம் நஞ்சினி அவர்கள்

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 05-07-1961 | 26-12-2004 |

அன்புடனே பெற்றெடுத்து
அகல் விளக்காய் ஒளிதந்த - எம்
குலவிளக்கே!
ஆண்டொன்று ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரம்.

உங்கள் ஆத்மா சாந்திபெற 26-12-2005 அன்று முல்லைத்தீவு புனித ரூதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்

தகவல்:
பேராளி நிறைமரசி.
காலதி படையாளி.

முகவரி:
மா. சுந்தரலிங்கம்,
செல்வபுரம், முல்லைத்தீவு,
(வட்டுவாகல்)

(6955)

---


இன்றைய நாகரிகங்களுக்கு நாடுங்கள்

# படையப்பா பியூட்டி ஹெயார் கட்டிங் சென்ரர்

| ஜென்ஸ் பியூட்டி | லேடிஸ் பியூட்டி கட் |
| --- | --- |
| 01. பிளீச்சிங் | 01. மெசின் கட் |
| 02. பேஷியல் | 02. ஸ்ரைல் கட் |
| 03. பேஸ் மாஸ்க் | 03. பிரியங்கா கட் |
| 04. பேஸ் மசாஜ் | 04. Nike கட் |
| 05. த்ரெட்டிங் | 05. விஜயசாந்தி கட் |
| 06. ஹெட் மசாஜ் கர்லிங் | 06. டயானா கட் |
| 07. ஹேர் ஸ்பிரேஹேர் | 07. செம்பருத்தி கட் |
| 08. டைஹேர்வுறவுன் டை | 08. பேபி சாலினி கட் |

வாடிக்கையாளர்களுக்கு எமது கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்கள்.

பிரதான வீதி,
அடம்பன்,மன்னார்.
தொ.பே.0776982876

உரிமையாளர்.
ம.ஜஸ்ரின்

(13622)


---

UNOPS | United Nations Office for Project Services

## EXPRESSIONS OF INTEREST

The Sri Lanka Project Implementation Facility of the United Nations Office for Project Services seeks expressions of interest for the provision of individual consulting and contract services in the following subject areas:

**Operations and Procurement Services**

For Field Office in Kilinochchi and Sub-Office in Jaffna we seek expressions of interest from individuals with relevant experience as:

- Finance Assistant
- Finance Clerk
- Logistics Assistant

**Engineering Services:**

For multiple building reconstruction projects in Jaffna, Mullaitivu and Kilinochchi Districts we seek expressions of interest from qualified individuals:

- Senior Field Engineers
- Technical Officers/structures
- Site Engineers/structures

Interested and qualified candidates are invited to submit a concise CV, by email or by post, to
Field Coordinator
UNOPS Sri Lanka Project Implementation Facility
230, Thirunagar, Kilinochchi - unopskili@unopsmail.org

(சி-13566)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## மருதை அனுசலாதேவி

காந்திக்கிராமம், கோணாவில்.

| தாயின் மடியில் | கடலன்னை மடியில் |
| --- | --- |
| 09-09-1991 | 26-12-2004 |

**எம்பாசத்தின் தங்கையே
நீ எம்மை விட்டு ஓர்
ஆண்டு சென்றாலும்
ஆறவில்லை
உன் துயரம்
நீ வருவாய்
என வழி பார்த்துக் காத்திருந்தோம்
வந்ததம்மா ஒரு செய்தி
நீ ஆழிப்பேரலையால்
அடிபட்டு கடல் அன்னையின்
மடியில் உயிர் நீத்தாய் என்று.
நீ எம்மைப் பாதியிலே
பரிதவிக்கவிட்டு
கடல் தாயின் அரவணைப்பில்
சென்றாயோ எம் தங்கையே.**

உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வணங்குகிறோம்.

உன் பிரிவால் துயருறும்

அக்கா கௌசலாதேவி, அத்தான் ஞானறஞ்சன், அண்ணா ரவி, அண்ணா சுரேஸ், தங்கை தயா.

தகவல்:
பா. ஞானறஞ்சன் கௌசலாதேவி

(7183)

# முழு உடல் தகுதி பெற்றவர்களே இந்திய சுற்றுலாவில் இடம்பெறுவர்



வோகன்


"இந்திய சுற்றுப்பயணத்தில் முழு உடற்தகுதிபெற்ற வீரர்களே இடம்பெறுவர்" என இங்கிலாந்து அணித்தலைவர் வோகன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை இழந்தது. 2006 மார்ச் மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடவுள்ளது. இந்திய சுற்றுப் பயணத்தைப் பற்றி அவர் கூறுகையில் 'கடந்த சில வருடங்களாக எங்கள் அணி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

காயம் காரணமாக முக்கிய வீரர்கள் விலகியபோது அந்த வாய்ப்பை புதுமுக வீரர்கள் நன்றாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். காயம் ஏற்படுவது என்பது விளையாட்டில் சகஜமான ஒன்று. பாகிஸ்தான் சிறப்பாக விளையாடியது என்பதை மறைக்க இயலாது. அக்தர், இன்சமாம் அபாரமாக விளையாடினர்.

இத்தொடரில் கிடைத்த அனுபவங்கள் இந்திய சுற்றுப் பயணத்திற்கு மிகுந்த உதவியாக இருக்கும்' என தெரிவித்தார்.

# மரடோனா கோபமடைந்தது தவறில்லை



ஆர்ஜென்டீனாவின் முன்னாள் கால்பந்து சம்பியன் டயாகோ மாரடோனா துப்பாக்கி முனையில் கைது செய்து மிரட்டப்பட்டது தவறானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1986 இல் உலக கோப்பை கால்பந்துப் போட்டியில் ஆர்ஜென்டீனா கோப்பை வெல்ல காரணமாக இருந்தவர் டயாகோ மரடோனா. இவர் கடந்த புதன்கிழமை பிரேசிலில் நடைபெற்ற கண்காட்சி நலநிதி கால்பந்து போட்டியில் பங்குபற்றினர். ஆட்டம் முடிந்து தாயகம் திரும்புவதற்காக ரியோ டி ஜெனிரோ விமாநிலையத்திற்கு வந்துள்ளார். விமான நுழைவு வாயிலின் அருகே வந்தபோது வாயில் கதவு அடைக்கப்பட்டுவிட்டது.




கோபமடைந்த மரடோனா பொலிசாரிடம் கூற முற்பட்டபோது துப்பாக்கி முனையில் கைது செய்யப்பட்டார். இது குறித்து முன்னாள் கால்பந்து வீரரும் மரடோனாவின் நண்பருமான அலிஜேன்ட்ரா மேன்குசா கூறுகையில்; 'மரடோனா கோபமடைந்ததில் தவறில்லை. நுழைவு வாயிலின் கதவு அடைக்கப்பட்டதன் காரணம் கேட்பதற்குள் பொலிசார் அவரை துப்பாக்கி முனையில் கைது செய்தனர்' என்றார். கைது செய்யப்பட்ட மரடோனா சிறிது நேரத்தில் விடுதலை செய்யப்பட்டார்.



டோக்கியோவில் நேற்று முன்தினம் நடந்த பனிச்சறுக்கு போட்டியில் யப்பானின் ஷிசுகா அரகாவா உடலை வில்லாக வளைத்து அற்புத சாகசம் புரிந்தார்.

# புதிய ஒப்பந்தம் அறிவிப்பு பதானுக்கு ஒரு கோடி சம்பளம்




இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கான ஆண்டு சம்பளம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதுவரை 35இலட்சம் ரூபாய் வாங்கி வந்த இர்பான் பதானின் சம்பளத்தொகை. ஒரு கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது.

பாகிஸ்தான் தொடருக்கான அணியைத் தேர்வு செய்த அதே வேளையில் இந்திய வீரர்களுக்காக புதிய சம்பள ஒப்பந்தத்தையும் கிரிக்கெட்சபை மும்பையில் நேற்று முன்தினம் அறிவித்தது. இதில் 'ஏ', 'பி', 'சி' மூன்று தரத்தில் சம்பளத்தொகை உயர்த்தப்பட்டுள்ளது. ரூபா.50 இலட்சமாக இருந்த 'ஏ' தர வீரர்களுக்கு, இனி 80 இலட்சம் முதல் ரூபா.ஒரு கோடிவரை அளிக்கப்படவுள்ளது. 'பி'தர வீரர்களுக்கு ரூபா.35 இலட்சத்திலிருந்து 60-70 இலட்ச ரூபாயாகவும், 'சி' தர வீரர்களுக்கு 20 இலட்ச ரூபாயிலிருந்து 30-40 இலட்ச ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

புதிய ஒப்பந்தத்தின் படி,'பி' தரத்தில் இருந்த பதான் சிறப்பாக விளையாடுவதன் மூலம் 'ஏ' தரத்திற்கு முன்னேற்றம் பெற் றுள்ளார். கடந்த முறை ஒப்பந்தத்தில் இடம் பெறாத டோனி, இம்முறை நேரடியாக 'பி' தரத்தில் இடம் பெற்றுள்ளார். சமீப காலமாக அணியில் இடம் பெறாத சஹீர் கானுக்கு பின்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவர் 'பி'தரத்திலிருந்து 'சி'தரத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். தமிழக வீரர் பாலாஜி, ஆசிஷ் நெஹ்ரா, பார்த்திவ் பட்டேல், ஆகாஷ் சோப்ரா ஆகியோர் ஒப்பந்தத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். மற்றப்படி, சச்சின், ராவிட், கங்குலி போன்ற முன்னணி வீரர்கள் 'ஏ' தரத்தில் நீடிக்கிறார்கள்.தரம் 'ஏ' கங்குலி, ராவிட், சச்சின், அனில் கும்ளே, லட்சுமண், சேவாக், ஹர்பஜன், இர்பான் பதான். தரம் 'பி' :- யுவராஜ், கைப், டோனி, அகார்கர்.தரம் 'சி': முரளி கார்த்திக், காம்பிர், சகிர்கான்.

# சிறிலங்கா கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் அணித்தலைவர் ரணதுங்க விலகினார்?



சிறிலங்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரான அர்ஜுன ரணதுங்க கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதற்கான காரணத்தை அவர், கூறும்போது இந்நாட்டின் கிரிக்கெட்டை விரும்பும் தான் தனது பொறுப்பை மிகவும் கடினமாக நிறைவேற்றி வந்ததாகவும் அதற்கான பலனைப் பெற முடியாது விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையில்தான் பதவி விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என்று குறிப்பிட்ட அவர் சபையில் சில விடயங்கள் தனக்கு மகிழ்ச்சியளிப்பனவாக இல்லை என்று தெரிவித்ததுடன் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அணி நாடு திரும்பியவுடன் தனது பதவி விலகல்கடிதத்தை கையளிக்கவிருப்பதாகவும் கூறியுள்ளார்.

1982 ஆம் ஆண்டு முதன்முதல் சிறிலங்கா டெஸ்ட் அணியில் இணைந்த ரணதுங்க 93 டெஸ்ட்களில் பங்கேற்று 5,105 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்துள்ளார். அத்துடன் 56 டெஸ்ட் போட்டிகளில் அணித்தலைவராகப் பணியாற்றியுள்ளார். அத்துடன் 269 ஒருநாள் போட்டிகளில் 7,456 ஓட்டங்களைப் பெற்றிருப்பதுடன் 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய அணித் தலைவர் பெருமையைப் பெற்றார். போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற இவர் 2003 ஆம் ஆண்டு கிரிக்கெட் சபைத் தலைவராக பதவி ஏற்றார். அதன்பின்னர் இவ்வருடம் சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறிலங்கா பேச்சாளராகப் பதவியேற்றார்.

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் மரியா ஷரபோவா விலகினார்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரிலிருந்து ரஷ்யாவின் ஷரபோவா விலகியுள்ளார்.

ரஷ்யாவின் நட்சத்திர வீராங்கனை ஷரபோவா. 2005 தரவரிசைப்பட்டியலில் நான்காம் இடத்தில் உள்ளார்.

டென்னிஸ் விளையாட்டில் மிக முக்கியமாகக் கருதப்படும் நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் முதல் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி அடுத்த மாதம் தொடங்கவுள்ளது. இந்நிலையில் தோள்பட்டை காயம் காரணமாக அவர் தொடரிலிருந்து விலகுகிறார். இதுபற்றி அவர் கூறுகையில்; அவுஸ்திரேலிய ஓபன் தொடரிலிருந்து விலகியது எனக்கு மிகவும் வருத்தம் அளிக்கிறது. வலது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் குணமடையாததால் நான் விலகுகிறேன் 2007 அவுஸ்திரேலிய ஓபன் போட்டிகளில் கட்டாயம் விளையாடுவேன் எனத் தெரிவித்தார்.



ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா 'குட்டி' ரசிகையின் ஆட்டத்தை கண்டுகளிக்கிறார்.

# இரண்டாவது டெஸ்ட் இன்று



அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று மெல்போர்னில் ஆரம்பமாகின்றது.

இதில் தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் ஜெக் கலிஸ் இடம்பெற்றுள்ளார்.தென்னாபிரிக்காவின் சகலதுறை வீரர் கெம் நீக்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலிய அணியில் காயமடைந்த லாங்கர் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி எத்தரப்பிற்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

## சுவீடன் வீராங்கனைக்கு காயம்

ஒலிம்பிக் போட்டிகளில் முப்பாய்ச்சல் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற சுவீடனைச் சேர்ந்த கிறிஸ்டியன் ஒல்சன் வலது பாதத்தில் சத்திர சிகிச்சை செய்துகொள்ள இருப்பதால் 2006 ஆம் ஆண்டு நடைபெறும் உலக உள்ளரங்க சம்பியன் போட்டிகளில் கலந்துகொள்ள மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் ஏதென்ஸ் போட்டியில் வெற்றிபெற்ற பின் அவர் வேறு போட்டிகளில் இதுவரை கலந்து கொள்ளவில்லை. அந்தப் போட்டியுடன் அவர் காயமடைந்தார். கடந்த செவ்வாய்க் கிழமை இவர் இரண்டாம் முறை சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டதுடன் மேலும் ஒரு சத்திர சிகிச்சைக்கு முகம் கொடுக்கவுள்ளார்.

## சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப் போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# தேசியத்தை சிதைக்கும் முயற்சி!

தமிழ் தேசியவாதியும், சிரேஷ்ட அரசியல்வாதியும் சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் நத்தார் ஆராதனையின்போது படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம்தமிழ் தேசியத்தின் தூண் ஒன்றைச் சாய்க்கும் முயற்சி ஒன்று நடைபெற்றுள்ளது.

இப்படுகொலைக்கு யார் பொறுப்பு என்பது குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டிய தேவை என்பது இல்லை. தனியாகவோ அன்றிக் கூட்டமாகவோ சிறிலங்கா அரச படைகளினாலோ, அன்றி அவர்களின் ஆதரவுடன் இயங்கும் துணை இராணுவ குழுக்களான தமிழ் இனவிரோதக் குழுக்களினாலோ இப்படுகொலை செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், இதை யார் செய் திருப்பினும் இதற்கு சிறிலங்கா அரசின் ஆதரவும் அங்கீகாரமும் இல்லாமல் இருக்கமுடியாது என்பது வெளிப்படையானது. இப்படுகொலைக்கும் தமக்கும் சம்பந்தமில்லை எனச்சிறிலங்கா அரசாங்கம் கூறுவது எங்கப்பன் குதிருக்குள் இல்லைஎனக் கூறுவதற்கு ஒப்பானதாகும்.

சிறிலங்கா ஆயுதப்படைகளுடன் தமிழ் இன விரோதக் குழுக்கள் இயங்குவதென்பதும் அவர்கள் இனவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவதும் புதியதொன்றல்ல. இந்தவகையில் ஜோசப் பரராசசிங்கம் போன்றவர்களைப் படுகொலை செய்வதில் இவ் இனவிரோதக் குழுக்களுக்கு அரசாங்கத்தின் ஒப்புதல், அன்றி ஆசீர்வாதமின்றி மேற்கொள்ள முடியாது.

ஏனெனில் ஒரு அரசியற் படுகொலையை அங்கீகாரமின்றி மேற்கொள்வதானால், அது இவ் இனவிரோதக் குழுக்களின் இருப் பையே கேள்விக்குறியாக்கிவிடும். ஏனெனில், இத்தகையபடு கொலைகளினால் அரசாங்கம் சந்திக்கப்போகும் நெருக்கடிகள் சிறியதாக இருக்கமாட்டாது.

தமிழினத் தேசியவாத சக்திகளை சிறிலங்கா அரசு அழித்தொழிக்கும் நடவடிக்கை இன்று தான் தொடங்கியதல்ல. இதற்குப் பல உதாரணங்கள் சுட்டிக்காட்டத்தக்கது யுத்தநிறுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலைகள் அரசாங்கம் சமாதானப் பாதையில் தொடர எத்தகைய அக்கறையும் கொண்டி ருக்கவில்லை என்பதையே உறுதி செய்வதாகவுள்ளது.

அதிலும் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் தமிழ்தேசிய வாதிகளைக்குறிவைத்துத் தாக்குவதில், சிங்களப் பேரினவாத சக்திகள் முனைப்பாகவே உள்ளன. இந்தவகையில் சமாதான காலத்தில் படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாள ரான தம்பையா, பத்திரிகையாளர்களன டி.சிவராம், நடேசன் போன்றவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியும்.

இப்படுகொலைகளின் மூலம் தமிழ் மக்களை அச்சுறுத்துவதோடு, அவர்களின் தேசியம், தேசிய விடுதலை என்ற சிந்தனையையும் தோற்கடித்துவிடலாம் எனச் சிங்களப் பேரினவாத சக்திகள் முற்பட்டு நிற்கின்றன. இதற்கு இனவிரோதிகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். தமிழ் தேசியத்தை சிதைத்துவிடுதல் என்பதில் சிங்களப் பேரினவா தத்திற்கு எந்த வகையிலும் குறையாத இனவிரோதக்குழுக்கள் பேரினவாதியின் கனவுகளில் ஓரிரண்டை நிறைவேற்றியுள்ளனர்.

சுமார் நான்கு ஆண்டுகள் வரையில் அமுலில் உள்ள யுத்தநிறுத்த உடன்பாடு தற்பொழுது மிக மோசமானதொரு கட்டத்தை எட்டியுள்ளது. குறிப்பிட்டுக் கூறுவதானால் யுத்தநிறுத் தத்தின் உடன்பாட்டின் இறுதி நாட்கள் எண்ணப்படுகின்றனவா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துபவையாக உள்ளன.

இத்தகையதொரு நிலை உருவாவதற்கு – சிறிலங்கா அரசாங்கம் யுத்தநிறுத்த உடன்பாட்டை சீராக அமுல் செய்யாமையே காரணமாகும். அதாவது யுத்தநிறுத்தவிதிகளை ஒரு ஒப்புக்காக மட்டுமே சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண் டுள்ளனர் அவ்வாறு இல்லாதுவிடில் போர்நிறுத்த உடன்பாட்டை அரசாங்கம் அமுல் செய்திருப்பின் இன்றையதொரு சூழ்நிலை உருவாகியிருக்க முடியாது.

ஆனால், அரசாங்கத்தின் நோக்கம் அவ்வாறானதாக இருந்ததில்லை அரசாங்கம் எப்பொழுதும் தமிழர் போராட்டத்தைச் சிதைத்து தமிழர் தாயகத்தில் தாம் எப்பொழுதும் இராணுவ மேலாதிக்க நிலையில் இருக்க வேண்டும் என்ற ரீதியிலேயே செயற்பட்டது.

ஆகையினால் தமிழ் தேசியத்தைச் சிதைப்பதற்காக எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தயாராகவேயுள்ளனர். ஆனால் தமிழ்தேசிய இனத்தின் உணர்ச்சிகளையும், எழுச்சியையும் எவரும் இராணுவ அடக்கு முறை மூலமும் படுகொலைகள் மூலமும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடலாம் எனக்கருதுவது தவறான வரலாற்றுப் புரிதலாகும்.




# மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் படுகொலைக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம்

(நமது நிருபர்)

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் படுகொலை செய்யப் பட்டமையைக் கண்டித்து பல்வேறு தரப்பினரும் தமது கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

**மட்டு. அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன்:-**

சிறிலங்காப் புலனாய்வுத் துறையினரின் சதி நடவடிக் கையால் மாபெரும் தேசக் குரலை இன்று நாம் இழந்து நிற்கின்றோம். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான யோசப் பரராசசிங்கம் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள புனித மரியாள் இணைப் பேராலயத்திற்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ள சம்பவம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக் கையில்:- இந்தத் தாக்குதலைச் சிறிலங்காப்படைப் புலனாய்வுப் பிரிவினர் திட்டமிட்டு நடாத்தியுள்ளனர். எனவே இந்தக் கொலைக்கான முழுப் பொறுப்பையும சிறிலங்கா அரசு பொறுப்பேற்க வேண்டும். இந்தச் சம்பவமானது அப்பட்டமான போர் நிறுத்த மீறல் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். திருமதி சுகுணம் யோசப் அவர்களுக்கும், ஏனைய பொது மக்களுக்கும் எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் தேசியக் குரலாய் ஒலித்த யோசப் பரராசசிங்கம் அவர்களின் படுகொலை தொடர்பாக சர்வதேச சமூகம் கவனத்திற் கொண்டு இந்தக் கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம் என தெரிவித்துள்ளார்.

**கிளி.பொது அமைப்புக்களின் ஒன்றியம்:-**

மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் அவர்கள் தென் தமிழீழத்தின் விடிவெள்ளி. தமிழர் தாயகத்தின் விடிவிற் காகவும், தமிழர்களின் உரிமைகளுக்காகவும் எப்போதும் அஞ்சா நெஞ்சுறுதியுடன் குரல்கொடுத்து வந்தார் என கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தமிழர் தாயகத்தைக் கூறுபோட்டு, தமிழர் பலத்தை நசுக்குவதற்காக சிங்கள பௌத்த பேரினவாதம் தென்தமிழீழத்தைப் பிரிப்பதற்கு எடுத்த முயற்சிகளை உடைத்தெறிவதில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்தார். சிங்கள அரசின் ஆதரவுடன் கருணா என்ற புல்லுருவி, பிரதேசவாதத்தை முதன்மைப்படுத்தி தனக்கெதிரான வர்களை வேட்டையாடிய இக்கட்டான சூழ்நிலையிலும் மட்டக்களப்பில் இருந்து கொண்டு அப்பிரதேச வாதத்திற்கு எதிராக துணிந்து குரல் கொடுத்ததுடன் எமது தேசியத்தலைவர் பிரபாகரனே என்று ஓங்கி ஒலித்தவர். அதுமட்டுமல்ல அவர் உயிர் பறிக்கப்படும்வரை கருணாகுழு என்ற பெயரில் சிங்கள அரசு செய்யும் நிழல் யுத்தத்தை அம்பலப்படுத்தியவர் என் மேலும் தெரிவித்துள்ளது.

**பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்த மூர்த்தி:-**

இந்த துயரச் சம்பவத்தைக் கேட்டு நான் மிகவும் வேதனையடைகிறேன். ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் சிறந்த தமிழ் தேசிய உணர்வாளர். அவர் சிறந்த அனுபவமிக்க அரசியல் வாதி அவரை இழந்தது எமக்குப் பெரிய இழப்பு இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: சிறிலங்கா அரசின் இந்தச் செயற்பாடானது அதன் மிகக் கொடூரமான யுத்த நிறுத்த மீறலுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். தற்போது நான் ஒரு விஜயத்தினை மேற்கொண்டு லண்டனில் இருக்கின்றேன். இச்சம்பவம் என்னை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. சிறிலங்கா அரசின் அத்துமீறிய காட்டு மிராண்டித்தன மான இந்தச் செயற்பாடுக்களை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுக்கவேண்டும். தமிழ் தேசியத்தின் குரல்வளையை நசுக்குவதற்காக இப்படுகொலை சிறிலங்கா அரச புலனாய்வுப் பிரிவினால் செய்யப் பட்டுள்ளது என்றே நான் கருதுகின்றேன். இவ்வாறான சம்பவங்கள் தமிழ் தேசியத்தினை திட்டமிட்டு நசுக்குவ தற்கான சதி என்றே சொல்லவேண்டும். கடந்த ஆண்டு சுனாமி தந்த துயரம் போலவே இந்த ஆண்டும் தமிழ்மக்களிற்கு பெரும் துயரம் தரக் கூடிய நிகழ்ச்சியே இது. எது எப்படியிருந்தாலும் இந்த திட்ட மிட்ட படுகொலைக்கு சிறிலங்கா அரசாங்கமும் சிறிலங் கா இராணுவமும் தான் நிச்சயமாகப் பொறுப்பேற்க வேண்டும். என்றும் அவர் குறிப்பிட்டார்.

**பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம்:-**

ஒரு நீண்டகால அனுபமுடைய எமது மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பிரை படுகொலை செய்து விட் டார்கள். இது எம்மைப்பொறுத்த வரையில் மிகப்பெரிய இழப்பு. இந்தப்படுகொலையினை யாரும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என முல்லை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சகனகரட்ணம தெரிவித்தார்.

இதற்கு அரசாங்கம் தான் பதில் சொல்ல வேண் டும் ஏனெனில் அவர் மிகநீண்டகாலமாக பாராளுமன்ற உறுப்பினராக இருப்பவர் அவருக்கான பாதுகாப்பை வழங்காமலிருந்தது அரசின் குற்றம். இவர் உலகம் முழுவதும் தமிழ்மக்களின் குரலாய் ஒலித்துள்ளார். தமிழ் மக்களின் வேதனையை உலகம் முழுவதும் எடுத்துச் சென்றவர்.இந்த மிலேச்சத்தனமான ஒரு வன்முறையான சம்பவத்தை அதுவும் ஒரு தேவாலயத்திற்குள் வைத்துச் செய்திருப்பது கண்டனத்திற்குரியது. இந்தப் படு கொலைக்கான பதிலை எமது மக்கள் நிச்சயம் அளிப் பார்கள் அவர்கள் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளக் கூடியவர்கள்.நான் இந்தப் படுகொலைச்சம்பவத்தினை ஒரு கேவலமான விசயமாகவே கருதுகிறேன். இப்படிப் பட்ட கொலையாளிகளுடன் அரசாங்கமும் இணைந்து செயற்படுவதுதான் ஒரு வேதனையான விடயம். நான் அரசுக்கும் படையினருக்கும் சொல்லுகிறேன் இப்ப டியான நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால். தமிழர் கள் இனியும் பொறுக்க மாட்டார்கள் நாம் அமைதி வழியை விட்டு வெளியேற வேண்டிவரும். அதையே நான் அரசுப்படைகளிற்கும் அரசுக்கும் சொல்லிவைக்க விரும்புகின்றேன் என்றார்.

**ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை:-**

கிறிஸ்தவ தேவாலயத்தில் நிகழ்ந்த ஜோசப்பரரா சசிஙகம் அவர்களின் படுகொலை துக்ககரமானதும், மனிதா பிமானமுள்ள மக்களின் மனதை உலுக்குவதாகவும் உள்ளதென திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

**இரா. சம்பந்தன்:-**

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழ் மக்களின் வரலாற்றில் கறைபடிந்த ஒன்று என்றும் மிக வேதனை தருகின்ற சம்பவம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

**தென்கிழக்கு ஊடகவியலாளர் சங்கம்:-**

தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜேசப்பரராசசிங்கம் அவர்கள் நேற்றிரவு சுட்டுக்கொல் லப்பட்டதை தென்கிழக்கு ஊடகவியலாளர் சங்கம் வன்மை யாகக கண்டித்துள்ளது. கிழக்கிலங்கை பத்திரிகை அபிவி ருத்தி ஸ்தாபனத்தின் தலைவரான ஜோசப்பரராச சிங்கம் அவர்கள் ஊடகவியல் அமைப்பை உருவாக்கி கிழக்கில் தமிழ் ஊடகவியலாளர் பலரை தட்டிக்கொடுத்து உரமூட்டி யவர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஓயாது குரல் கொடுத்த ஒலி இன்று ஓய்ந்திருப்பது ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது என்று தெரிவித்து தென்கிழக்கிலங்கை ஊடகவியலாளர் சங்கம் இப்படுகொலையை வன்மையாகக் கண்டித்துள்ளது.

# யாழ்.இல் சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் வேறு இடத்தில் கைதானவர்களா?

## மக்கள் தரப்பில்பலத்த சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவம் மீதான தாக்குதலை நடத்திய நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும் அவர்களின் உடலை யாழ். மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் சிறிலங்கா இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆனால் இவர்கள் அனைவரும் தாக்குதலை நடத்தியவர்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

உயிரிழந்த நான்குபேரில் இருவரது உடலை அடையாளம் காணப்பட்டுள்ளன. யாழ். மத்திய கல்லூரியின் காவலாளி கிருஸ்ணர் விமலேஸ்வரன் (வயது-31),யாழ்.கொட்டடியில் மோட்டர் சைக்கிள்திருத்தும் நிலையம் வைத்திருந்த பாலசிங்கம் சந்திரகாந்தன் (வயது -24) ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவத்தில் உயிரிழந்த கிருஸ்ணர் விமலேஸ்வரனின் உடல் கல்லூரிக்குள் கிடந்ததாகவும் அதை இராணுவத்தினரே வெளியில் எடுத்து வந்து தாக்குதல்நடந்த இடத்தில் கிடத்தியதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். கிருஸ்ணர் விமலேஸ்வரன் தனது கடமையைச் செய்துகொண்டிருந்த இடத்துக்கு அருகாமையில் கல்லூரிக்கு உட்பகுதியில் பெருமளவிலான இரத்தம் சிந்திக் கிடப்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஊர்காவற்றுறை வேலணையிலிருந்து இடம்பெயர்ந்து மானிப்பாயில் வசித்து வந்தவர் பாலசிங்கம் சந்திரகாந்தன்.

அவரது மனைவி மற்றும் உறவினர்கள் மல்லாகம் பதில் நீதிபதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் சந்திரகாந்தனின் உடலை அடையாளம் காட்டினர்.

துப்பாக்கிச்சூட்டு அடையாளங்களுடன் உள்ளஒரு பெண்ணின் உடலையும் இந்தத் தாக்குதலில் பலியானோர் அல்லது தாக்குதலை நடத்தியவர் என்ற கணக்கில் இராணுவத்தினர் வைத்துள்ளனர்.

ஆனால் அந்தப்பெண்ணின் உடலில் வழமையான அவரது உடையுடன் அவரை விடுதலைப்புலி போராளி என்று காட்டுவதற்கான உடை ஒன்றையும் இராணுவத்தினர் இணைத்துள்ளனர். இதை அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இருதரப்புத் துப்பாக்கிச் சண்டை முடிந்த பின்னர் 20 அல்லது 30 நிமிடத்துக்குப்பிறகு சம்பவ இடத்தில் தொடர்ச்சியான துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

சந்தேகத்தின் பேரில் இதரபகுதிகளில் கைது செய்யப்பட்டோரை சம்பவ இடத்துக்கு அழைத்து வந்து இராணுவத்தினர் சுட்டுக்கொன்று இருக்கலாம் என்றும்அப்பகுதி மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.தாக்குதலை நடத்தியபொங்கியெழும் மக்கள் படையும் தாக்குதலை நடத்தியஇருவரும் பத்திரமாகத் திரும்பிவிட்டனர் என்று விளக்கம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.(27)

### உயர்தர மாணவர்களுக்கான செயலமர்வு

2006 இல் பரீட்சை எடுக்கும் க.பொ.த.உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான இரசாயனவியல் பாடத்திற்கான செயலமர்வு நாளை காலை பத்துமணிக்கு முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் ஆசிரியர் அன்பழகனால் நடாத்தப்படவுள்ளதால் உரிய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

# தாக்குதலில் காயமடைந்த 8 பெண்களின் பெயர் விபரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சென்மேரிஸ் தேவாலயத்தில் இடம் பெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் மீது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினரும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக் குழுக்களும் திட்டமிட்டு நடத்திய கொலை வெறித்தாக்குதலில் காயமடைந்த எட்டுப் பெண்களின் பெயர்விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. திருமதி ஜோசப்பரராசசிங்கம் சுகுணம் (வயது-68), திரேஸ்மேரி (வயது-84), அரசரெட்ணம் சிசிலியா (வயது-64), சு.மோகனதாஸ் (வயது-58), நட்சிகா முத்துலிங்கம் (வயது-13), டேவிற் (வயது-27), ரஜனி ஜெயராஜ் (வயது-40), சயிக்சாகிதா (பாகிஸ தானியப் பிரஜை) ஆகியோர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இதில் திருமதி ஜோசப் பரராசசிங்கம் சுகுணம் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் காயமடைந்த பாகிஸ்தானியப் பிரஜை கிறிஸ்தவக் கன்னியருக்கான பயிற்சியை மேற்கொண்டிருந்தவர் என்பதும் தெரியவருகின்றது.

# ஊறணியில் கைக்குண்டுத் தாக்கு; இரண்டு படையினர் படுகாயம்

வல்வெட்டித்துறை ஊறணி-பொலிகண்டிப் பகுதியில் ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்து நேற்றுக்காலை கைக்குண்டுத் தாககுதலொன்று நடத்தப்பட்டுள்ளது. இதில் இரண்டு படையினர் படுகாயமடைந்துள்ளனர். தாக்குதலை நடத்தியோர் மீது படையினர் துப்பாக்கிச்சூட்டை நடத்திய போதும் அவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றுவிட்டனர்.

சம்பவத்தையடுத்து பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறையூடான தரைவழிப்போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டது. வீதியால் பயணித்த மக்கள் மீதும் பரவலாகத் தாக்குதல் படையினரால் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைச் சூழலில் படையினர் தேடுதல்களை நடத்தினர். இதேவேளை பருத்தித்துறை நாவலடிப் பகுதியில் சிறிலங்காப் படைக்காவலரண் மீது நேற்று கைக்குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டுள்ளது. இதில் படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. (கா.27,37)

# வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய சிப்பாய்

(யாழ்ப்பாணம்)

புலோலியிலுள்ள இராணுவமுகாமுக்கு அருகேயுள்ள வீடொன்றினுள் ஓடு பிரித்து உள்ளே இறங்க முயன்ற சிப்பாய் ஒருவர் வீட்டார் கூக்குரலிட்டதையடுத்து அங்கிருந்து ஓடியுள்ளார் எனத் தெரியவருகிறது.

மேற்படி சிப்பாய் இரவு ஒரு மணியளவில் ஓட்டைப்பிரித்து வீட்டுக்குள்ளே இறங்க முயன்ற வேளை உள்ளே பொருத்தபட்டிருந்த சீற் உடைந்துள்ளது. இதனால் விழித்துக்கொண்ட வீட்டிலுள்ளோர் கூக்குரலிடவே அவர் தப்பி ஓடி இராணுவ முகாமுக்குள் புகுந்துள்ளார். இந்த வீட்டில் தகப்பனும் மகளும் மகளின் குழந்தையும் மட்டுமே இருந்துள்ளனர். அச்சமடைந்த இவர்கள் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டபோதும் எவரும் வந்து பார்வையிடவில்லை. இதனையடுத்து இவர்கள் அவ்வீட்டிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கா)

### குடாநாட்டில்...

மணியளவில் வெளியே அழைத்துச் செல்லப்பட்டு சுடப்பட்டிருந்தார். உயிரிழந்தவரது சடலம், சம்பவ இடத்திற்கு பொலிசார் வருகை தர பின்னடித்ததையடுத்து மதியம் வரை அங்கேயே காணப்பட்டிருந்தது.

மதியத்தின் பின்னர் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையினில் ஒப்படைக்கப்பட்டது. வைத்தியசாலைக்கு நேரில் சென்ற மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி சரோஜினி இளங் கோவன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார்.

அச்சுவேலியில்...

பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தை அண்டிய அச்சுவேலி- செல்வநாயகபுரம் பகுதியின் தோப்புச் சந்தியினில் வைத்து நேற்று முன்தினம் நள்ளிரவு இருவர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கொலலப்பட்டவர்கள் அச்சுவேலி கைத்தொழில் பேட்டைப்பகுதியைச் சேர்ந்தவர்களென கூறப்படுகின்றது.

இறந்தவர்கள் இருபிள்ளைகளின் தந்தையான மேனன் ரவி (வயது-44) மற்றும் ஒரு பிள்ளையின் தந்தையான மாரியப்பன் திவ்வியன் (வயது-25) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (27.37.32)

### கறுப்புக் கொடிகட்டி...

நிகழ்வு நாள்வரையில் சோக கீதங்களை இசைக்க விடுமாறும் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதேவேளை மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் படுகொலை செய்யப்பட்டமையையும் அண்மைய நாட்களாக யாழ்.குடாநாட்டில் படையினரால் பொதுமக்கள் கொல்லப்பட்டதையும் கண்டித்து நாளை குடாநாட்டில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அரச, அரசசார்பற்ற அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் சன சமூக நிலையங்கள், வீடுகள் என்பவற்றில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு மக்கள் கூடுமிடங்களில் சோக கீதம் இசைக்கப்பட்டு துக்கதினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

### ஒரேகுடும்பத்தை...

தனர் படையினரின் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தின்போது குறித்த நால்வரும் காணாமல் போயிருந்தனர்.இந்நிலையில் நேற்று நண்பகலளவில் இவர்களது சடலங்கள் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. படையினரே இவர்களைப் படுகொலை செய்துவிட்டு எரியூட்டியதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

### தமிழர்...

பண்டிகை ஆராதனையில் ஈடுபட்டிருந்த வேளையில் சிறிலங்காப் படைப் புலனாய்வுத் துறையினரும் அவர்களது கருணாகுழு, ஈ.பி.டி.பி. உள்ளிட்ட ஒட்டுக்குழுவினராலும் கொடூரமாக சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவரது மனைவி திருமதி சுகுணம் உட்பட ஆராதனையில் ஈடுபட்டிருந்த ஏழு பேர் காயமடைந்திருக்கின்றனர். வருகைக் கால ஆராதனையில் கலந்து தனது மக்களின் சமாதானத்திற்காகவும் விடுதலைக்காகவும் மன்றாட்டுச் செய்துவிட்டுப் பேராயரிடமிருந்து நற்கருணைப் பிரசாதம் பெற்றுத் திரும்புகையில் தேவாலயத்தினுள் புகுந்திருந்த சிறிலங்காப் படைப் புலனாய்வாளர்களும் ஒட்டுக் குழுவினரும் இணைந்து இந்தத் தேசப்பற்றாளரைத் துப்பாக்கிச் சூட்டில் கொடூரமாகக் கொன்று விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காக சர்வதேச அரங்கிலும், இராஜதந்திர அரங்கிலும் குரல் எழுப்பி, மனித உரிமை அமைப்புக்களோடு தொடர்புகளைப் பேணி வடக்குக் கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் உருவாக்கத்திற்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்ட இந்த மனித உரிமைச் செயற்பாட்டாளரை சிறிலங்காப் படைப் புலனாய்வுத் துறையினர் மண்ணில் வீழ்த்தியுள்ளனர். ஜாதிக ஹெல உறுமய போன்ற தெற்கின் இனவாத சக்திகளின் கரம் சிறிலங்காப் படைப் புலனாய்வுத் துறைவரை நீண்டு செயற்படுவதை திட்டமிட்ட இக்கொலை நிரூபித்துநிற்கின்றது. மக்கள் தொண்டனாக தமிழ் தேச விடுதலைக்காகவும் மனித உரிமை மேம்பாட்டிற்காகவும் அயராது உழைத்த இவரை இந்த இனவாத சக்திகள் மரணிக்கச் செய்திருக்கின்றன. இந்த ஈவிரக்கமற்ற கொடூரக் கொலையினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அன்னாருடைய மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமரர்...

இன்று தமிழீழ தேசம் இழந்துவிட்டது. தமிழீழ மண்ணினதும் தமிழீழ மக்களினதும் விடிவிற்காக ஓயாது ஒலித்த ஒரு உரிமைக்குரல் இன்று ஒடுங்கிவிட்டது. பகைவனின் கோழைத்தனமான கோரமான தாக்குதலுக்கு ஒரு மகத்தான மனிதர் பலியாகிவிட்டார். இது தமிழீழ விடுதலை வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் துயர நிகழ்வு.

திரு. ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் ஒரு அபூர்வமான மனிதர், அசாத்தியமான குணவியல்புகள் கொண்டவர். இனிமையான பேச்சும், எளிமையான பண்பும், பெருந்தன்மையான போக்குமே அவரது ஆளுமையின் சிறப்பியல்புகள். நெஞ்சில் உறுதியும் நேர்மையும் கொண்ட ஒரு உன்னதமான அரசியல்வாதி. தமிழீழ மக்களால் பெரிதும் போற்றப்பட்ட சிறந்த மனித உரிமைப் போராளி. அனைவரையும் கவர்ந்த ஒரு தமிழினப் பற்றாளர். இவரது சாவு தமிழர் தேசத்திற்கு என்றுமே ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு.

சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் அடக்குமுறைக்குள் வாழ அவர் என்றும் விரும்பியதில்லை. இந்த அடக்குமுறைக்குள் தமிழீழ மக்களது வாழ்வு சிக்குண்டு சிதைந்து போவதை அவர் அறவே வெறுத்தார். இந்த அடக்குமுறையிலிருந்து தமிழீழ மக்கள் முற்றாக விடுபட்டு, விடுதலை பெற்று சுதந்திரமாக கௌரவமாக நிம்மதியாக வாழ்வதையே தனது வாழ்வின் இலட்சியமாக அவர் வரிந்து கொண்டார். இந்த இலட்சியத்தால் உந்தப் பெற்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு என்றும் உறுதுணையாக நின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் இலட்சியத்தையும் முழுமையாக முழுமனதுடன் ஏற்று தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்தார். பல்வேறு சிக்கலான சூழ்நிலைகளில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் ஆபத்துகளுக்கும் மத்தியில் மிகுந்த துணிவுடன் தமிழ்தேசியத்திற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் பல்வேறு வழிகளில் கைகொடுத்து உதவினார். மட்டக்களப்பு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினராகவும், வடக்கு- கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் நிறுவுனர்களில் ஒருவராகவும் தமிழீழ மக்களது உரிமைக்காக இடையறாது தொடர்ந்து உழைத்தார். தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் நியாயங்களையும் உண்மைகளையும் உலகுககுப் பரப்புரை செய்தார். அன்னார் ஆற்றிய அரும்பணிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை, என்றுமே பாராட்டுக்குரியவை.

திரு. ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது விடுதலைப் பணியை கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்துவிடுவதில்லை. சரித்திர நாயகனாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர் என்றும் வாழ்வார்.

# சாவு அறிவித்தல்

## அமரர் திரு.பொன்னையா துரைராஜா யோசேப்

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் இல 47திருநகர் யோகபுரம் மல்லாவியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பொன்னையா துரைராஜா யோசேப் அவர்கள் 24.12.2005 அன்று சாவவடைந்துள்ளார்.

இவர் மரியதிரேஸ் தவமணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற பொன்னையா, சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மத்தியாஸ் பெனடிற்.,திருமதி. றோசமுத்து ஆகியோரின் மருமகனும். யேசுதானந்தர் (அதிபர் பாலிநகர் மகாவித்தியாலயம்) .கிறிஸ்த்துதானந்தர், (ஜேர்மன்) அருளானந்தி (ஆசிரியை மல்லாவி மத்தியகல்லூரி) ஞானானந்தர் (பிரான்ஸ்), யோகானந்தர் (கனடா), தயானந்தர் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராணி (ஆசிரியை படிவம் 4 பாடசாலை திருநகர்), மரியநாயகம்.மலர்விழி.வினி (ஜேர்மன்), வாணி (கனடா) ஆகியோரின் மாமனாரும். அருள்மேரி, புஸ்பராணி இந்திராணி ,சாந்தகுமார் றூபராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும்ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 26.12.2005 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு மல்லாவி சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
யேசுதானந்தர்
மகன்.

(6020)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தால் உயிர் நீத்தவர்களின் நினைவைத்தாங்கி...




## 2006

JANUARY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

FEBRUARY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | | | |

MARCH

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

APRIL

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

AUGUST

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

செந்தளிர் சிறுவர் இல்லம்

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்